
NCEASL

பேழை 10 புறா 1

ஜனவரி - ஏப்ரல் 2015

# பேழைப்புறா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**பேழை 10 புறா 1**


## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் தட்டு | | பக் 2 |
| NCEASL இன் தட்டு | தூதுப்பணி அறிக்கை ஜெபசிங் முறே | பக். 3 |
| இறையியற்தட்டு | சமூக வன்முரண்பாடுகளும் கிறிஸ்தவ நிலைப்பாடும் | |
| | செ கு சேவியர் | பக்.6 |
| | சகல கிறிஸ்தவர்களும் ஐசுவரியவான்களாவது தேவசித்தமா? | |
| | கலாநிதி அஜித் ஃபெர்ணாண்டோ | பக். 10 |
| ஊழியக்கரிசினைத்தட்டு | வீழ்ந்துபட்டுள்ள உலகில் இயேசுவைப் பின்பற்றுதல் | |
| | பேராயர் வண.கலாநிதி. ரொபேட் சொலமன் | |
| | வேதனைக்கான மருந்தும் ஊசியும் | பக் 14 |
| | எமது கண்கள் இயேசுவின்மீது | பக் 17 |
| | தியாக அன்பு | |
| | மயூக்க பெரேரா | பக் 21 |
| உறவுத்தட்டு | கிறிஸ்துவின் தூதுவர்களாக அழைப்பு | |
| | றூபி ஹமில்டன் | பக். 26 |
| தூதுப்பணித்தட்டு | மெடோஸ் அம்மா | |
| | சாந்தி பொன்னு | பக். 29 |
| பயிற்சித்தட்டு | திட்டமுகாமைத்துவம் = சர்ஜீவ்ராம் | பக் 35 |
| தட்டிலே சிதலற்கள் | NCEASL இன் விசுவாச அறிக்கை | பக். 25 |
| | ஏனைய சிதறல்கள் ஆங்காங்கே பக் 5, 15, 29, 36 | |








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தட்டு




***எழுத்தினால் அதிகம் கூறலாம்; அதிக காலத்துக் கூறலாம்; அதிகம் பேருக்குக் கூறலாம்; அதிகம் பேர் கூறலாம். எனவே தமிழிலும் எழுதுவோம்.***

பேழைப்புறா வாசகர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்ட நிலையிலே இந்தச் சஞ்சிகை உங்களைச் சந்திக்கிறது. பலரது ஏக்கக்களுக்கும் ஜெபத்துக்கும் தேவன் அற்புதமாகப் பதில் கொடுத்துள்ளார் என்பதை நான் விசுவாசிக்கிறேன். நாட்டில் நல்லாட்சியை அமுல்படுத்த முயற்சி எடுத்துவரும் எமது தலைவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கும் கடப்பாடு எம்மீது உள்ளது. மாத்திரமன்றி, இந்தக் காலங்களிலே திசை மாறிப் போகக்கூடிய வாய்ப்புகளுக்கு உள்ளாகும் சபையினர்களுக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டும்.

நல்லாட்சி நிரந்தரமாவதற்கு எமது சிந்தனைகளிலே மாற்றங்கள் ஏற்படுவதும் அவசியம். தேவனை நாம் மெய்யாகச் சேவிக்கும்படிக்கு நாட்டின் காரியங்களில் நாம் ஈடுபடுவதும் எம்மீது உள்ள கடமையாகும். தேவன் சர்வவல்ல ராஜா என்பது அவர் அரசிலுக்கும் அதிகாரி, ஆண்டவர் என்பதையும் உள்ளடக்கியதாகும். இனி மாற்றங்கள் எப்படி இருக்கும் என்பது எமக்கு நிச்சயமற்றதாக இருந்தாலுங்கூட, மாற்றத்தை உசிதமானதாக்கும் பொறுப்பை நாம் உதாசீனம் செய்திடக்கூடாது. இன பேதங்களால், அவற்றை மூட்டித் தமக்குச் சாதகமாக்கி இடம்பெற்ற அரசியல் நகர்வுகளால், ஏற்கெனவே நாடு ரணகளப்பட்டுள்ளது. இதனை ஆற்றுவதற்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு அவசியம்.

அதேபோல, பல்வேறு கிறிஸ்தவ விசுவாச சமூகங்களும் தத்தமது நிர்வாக முறைமைமகளைச் சீர்தூக்கி மீளாய்வுசெய்து பார்க்கவேண்டியதும் அவசியம். சாட்சியுள்ள சபைகளாக, கிறிஸ்தவர்களாக நாம் இருக்கவேண்டியதன் அவசியம் எப்போதையும் விட இப்போதுதான் மிக அதிகம். மட்டுமன்றி கிறிஸ்தவ சமூகமாக சபைப் பிரிவுகளை மேற்கொண்டு ஐக்கியம் கொள்வதும் இந்தக் காலத்திலே விசேஷமாக அவசியம். இவைகளை மனதிற் கொண்டு வாசகர்களாகிய நீங்கள் சிந்தித்து உரிய படிமுறைகளை எடுத்து வளரும்படியாக வாஞ்சிக்கிறேன். உங்கள் சிந்தனைப் பிரதிபலிப்புக்களை எழுதி அனுப்பினால் அதைப் பேழைப்புறாவிலே பிரசுரிக்க முயற்சிகள் எடுப்போம். கர்த்தரின் நாமத்துக்கே மகிமை உண்டாகட்டும்.

அன்புடன்

பரமர்




**சஞ்சிகை நிர்வாகக் குழு**

கொட்பிறி யோகராஜா
எஸ். ஜி. நிரஞ்சன்
சகோதரி சாந்திபொன்னு
யூட் சிமியோன்
ஏபிரகாம் ராகுலன்
எஸ். கே. சேவியர்

**வருட சந்தா:**
ரூபா 100.00

**எமது விலாசம்:**
ஆசிரியர்,
பேழைப் புறா,
95, காலிவீதி
தெகிவளை 10350

**மின்னஞ்சல்:**
jesuvinanpu@gmail.com


**சந்தா செலுத்துமிடம்**

உங்கள் பிரதேச போதகர் ஐக்கியம்
அல்லது
உங்களுக்கு அருகாமையில் இருக்கும் இ.தே.கி.சு.ஐ. அலுவலகம்

**பேழைப்புறா**

ஊழியர், தலைவர்களுக்கான இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவ காலாண்டுச் சஞ்சிகை

பேழை 10
புறா 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச் சஞ்சிகையைத் தமது தமிழ் சஞ்சிகையாகப் பதிப்பிக்கும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்துடன் வாசக நெஞ்சங்கள் சங்கமமாகும் தட்டு இது.

# NCEASL இன் தட்டு

# தூதுப்பணி அறிக்கை

## ஜனவரி–ஏப்ரில் 2015

### அறிக்கை: ஜெபசிங் மரே

### தமிழாக்கம்: ஆசிரியர்

## ஜெபம்


### ஜெபநாள் – கொழும்பு, வத்தளை, பண்டாரவளை, கண்டி

இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ மன்றத்துடன் இணைந்து சகல சபைகளினதும் குழுக்களினதும் பங்களிப்புடன் ஐக்கிய ஜெபதினம் ஒன்றை கொழும்பு 7 இல் உள்ள அங்கிலிக்கப் பேராயல வளவிலே ஜனவரி 24ந்ததிகதி அனுஷ்டித்தது.

மேலும் ஜனவரி 30ந்திகதி, வத்தளையிலும், மார்ச் 11 அன்று பண்டாரவளையிலும் இதேபோன்ற "ஜெபநாள்" அனுஷ்டிக்கப்பட்டது. பல சபைப் போதகர்களும், தலைவர்களும் பொதுநிலையினர் தலைவர்களும் ஜெபவீரர்களும் இந்தத் தினங்களிலே ஆராதனைக்கும் ஜெபத்துக்குமாக வருகைதந்திருந்தனர். இதைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் தொடரும் ஜெபநிகழ்வொன்று மார்ச் 23 மற்றும் 24ந் திகதிகளிலே இலங்கை வேதாகமக் கல்லூரியிலே இடம்பெற்றது. போதகர் ஐக்கியங்களின் தலைவர்கள் கண்டி பிராந்தியப் போதகர்களுடன்கூட இந்த நிகழ்விலே பங்கேற்று, ஜெபத்திலம், வேதப் படிப்பிலும் ஐக்கியத்திலும் ஒன்றித்தனர்.

## பயிற்சியும் மாநாடுகளும்

### துன்புறும் போதகர்களுக்கான மாநாடு



துன்புறுத்தலூடாகக் கடந்து செல்லும் போதகர்களுக்கான கலந்துரையாடல் மாநாடொன்று பமுனுகம அமைவிடத்திலே ஜனவரி 27 தொடக்கம் 29 வரைக்குமான காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலினூடே திடமுடன் நிலைநிற்றல் (பு.தி.நி) மாநாடுகள்

நாவலப்பிட்டி ஜயபீமா ஓட்டலிலே பெப்ரவரி 25–27 காலப்பகுதியிலே ஒரு பு.தி.நி மாநாடு சபைத்தலைவர்ளுக்காக நடாத்தப்பட்டது. பலர் இதிலே பங்கேற்றனர். குறிப்பாக ஊழியம், குடும்பம், கிறிஸ்தவர்களுடனும் கிறிஸ்தவரல்லாதோருடனுமான உறவுகள் போன்ற தலைப்புக்கள் பங்கேற்பாளர்களை புத்தூக்குவதாயும் வலுவூட்டுவதாயும் அமைந்திருந்தன. ஒரு பங்கேற்பாளர் தெரிவிக்கையிலே, “இப்படியான போதனைகள் எம்மை ஊக்குவிக்கும்படிக்குத் தேவை. தயவுசெய்து மீண்டும் வந்து எம்மை வலுவூட்டுங்கள்” என்றார்.

மார்ச் 5 – 7 காலப்பகுதியிலே கிளிநொச்சி கருணாநிலையத்திலே ஒரு பு.தி.நி. மாநாடு இடம்பெற்றது. பல போதகர்களும் தலைவர்களும் அதிலே பங்கேற்றிருந்தனர். பாடங்களிலே ஆர்வமுடனும் ஊக்கமுடனும் பங்கெடுத்த பலர் அந்தப் பாடங்கள் தமது குறைவுகளைத் தமக்கு உணர்த்தித் தம்மை மாற்றியமைத்ததாகத் தெரிவித்தனர். “எம்மை பெரிதும் மனம் சோரப்பண்ணி, நம்பிக்கை இழக்கவைக்கும் கசப்புக்கள், மன்றும் மன்னிப்பின்மைகளை நாம் இனங்கண்டிருக்கிறோம். எம்மைப் புதுப்பித்தமைத்த இந்த நிகழ்வுக்கு இன்னும் பலர் பங்கேற்றுப் பயன்பெற்றிருக்கலாம் என எண்ணுகிறோம்” என்றார் ஒரு பங்கேற்பாளர்.

# சைகை மொழியினால் ஐக்கியம்

செவிப்புலன்றோர்களின் கிறிஸ்தவ அமைப்புடன் ஒன்றிணைந்து இ.தே.கி.சு.ஐ. அம்பாந்தோட்டையில் உள்ள பாட்டா அத எனும் பண்ணை வளாகத்திலே ஒரு சைகைமொழியாளர் ஐக்கிய நிகழ்வினை ஏற்பாடு செய்து, பெப்ரவரி 3 அன்று அது நடாத்தப்பட்டது. ஆண்களும் பெண்களுமாக சுமார் 70 பேர் இதிலே பங்கேற்றிருந்தனர். நல்ல உறவுகளுக்கான தொடர்பாடல் இவற்றிலே முக்கியத்துவப்படுத்தப்பட்டது. ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை அமைப்பது, மற்றும் பங்கேற்பாளர்கள் ஒருவர் ஒருவரிடம் இருந்து கற்றுக்கொள்ளும்படி அவர்களை ஒன்றிணைப்பது போன்ற நிகழ்ச்சிகள் அங்கே இடம்பெற்றன. அவர்களது மெய்யான தேவைகளை அறிவதற்கும் அங்கே கூடுமாய் இருந்தது.

# அவசர நிவாரணங்கள்

பொலனறுவை மாவட்டத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 82 குடும்பங்களுக்கு ஜனவரி 6ந்திகதி உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வெள்ளத்தால் பேருவளையிலே நிர்க்கதியாக்கப்பட்ட 35 குடும்பங்களுக்கு ஜனவரி 28ந்திகதி உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. பெப்ரவரி 16 அன்று, வெலிகந்தையிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 34 குடும்பங்களுக்கும் அதேபோல உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதேபோல திருகோணமலை வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மூதூரைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் அவரச நிவாரணமாக வழங்கப்பட்டன.

# கூட்டங்கள்

போதகர் ஐக்கியக் கூட்டங்கள் கொட்டியாகும்புற பிரதேசத்திலே பெப்பரவரி 16 அன்றுப் கண்டிப் பிரதேசத்திலே ஜனவரி 24ந் திகதியும் இடம்பெற்றன. இதேபோல போதகர் ஐக்கியங்களின் தலைவர்களுக்கான கூட்டங்கள் கொழும்பிலே பெப்ரவரி 10ந் திகதியும் கண்டியிலே மார்ச் 24ந்திகதியும் இடம்பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதகர்களை வலுவூட்டுதல்

## இறையியற் கற்கைப் புலமைப்பரிசில்

வேதாகமக் கல்லூரிகளிலே கல்வி பயின்றுவரும் 43 இறையியல் மாணவர்களுக்கு அவர்களது கற்கைக்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## பாடசாலை அனுசரனையுதவி

73 போதகர்களின் பிள்ளைகளுக்கான கல்விக்கு உரிய அனுசரனையுதவிகள் வழங்கப்பட்டன.

## ஜீவனோபாயக் கடன்கள்

8 கிறிஸ்தவ அங்கத்தவர்களுக்கு ஜீவனோபாயக் கடன் உதவிகள் வழங்கப்பட்டன (கொழும்பு, றத்மலான, இரத்தினபுரி, கேகாலை, மொறட்டுவ, கண்டி).

## அவரச நிதியுதவி

3 போதகர்களுக்கு அவசர நிதியுதவிகள் வழங்கப்பட்டன (வத்தளை, கடவத்தை, கேகாலை)

## பாடசாலைப்பொதிகள், வேதாகமங்கள், பாய்கள்

முறையே பொலனறுவை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலே வேதாகமம் இல்லாதிருந்த அல்லது இழந்திருந்த சுமார் 300 மற்றும் 250 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த 100 சபைகளுக்கு ஆராதனை நடாத்துவதற்கு வசதியாக, அங்கத்தவர்கள் அமர்ந்திருக்க மற்றும் முழந்தாளிட வசதியாகப் பாய்கள் விநியோகிக்கப்பட்டன. மேலும் முறையே பொலனறுவை மற்றும் இரத்தினபுரியைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான பாடசாலைப்பொதிகள் 300 உம் 250ம் விநியோகிக்கப்பட்டன.

## பதிப்புக்கள்

கலாநிதி அஜித் ஃபெர்னாண்டோ எழுதிய யோனா நூல் (சிங்களம்) மீள்பதிப்புச் செய்யப்பட்டது. மாற்கு நூலின் வியாக்கியானம் (தமிழில்) பதிப்பிக்கப்பட்டது.

நன்றி

தூதுப்பணி ஆணைக்குழு
ஏப்பிரல் 20, 2015

புயலினூடே திடமுடன் நிலைநிற்றல் தொடர் கடந்த சஞ்சிகையிலே முற்றுப்பெற்றது. இந்தமுறை கொள்கை அறையில் கட்டுரை எதுவும் இடம்பெறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியற் தட்டு

இறையியலை வேதப் பண்டிதர்களின் புலமைச்சொத்தாகக் கண்டுகொள்ளாமல், தேவன் வெளிப்படுத்தியவைகளின் படிப்பே அது என்பதை மனதில் இறுத்தியவர்களாக ஒரு சில முக்கிய விடயங்களை அலசி ஆராய உதவும்படிக்கே இத்தட்டு உள்ளது.



# சமூக வன்முரண்பாடுகளும் கிறிஸ்தவ நிலைப்பாடும்


செ. கு. சேவியர்

## சமூக வன்முரண்பாட்டின் பணயப்பங்காளர்கள்

சமூக வன்முரண்பாடுகள் இன்று உலகெங்கும் மலிந்து கொண்டு வருகிறது. அரசாங்கத்துக்கும் தீவிரப் போக்காளர்களுக்கும், ஒரு இனத்துக்கும் இன்னொரு இனத்துக்கும், ஒரு சமூகத்துக்கும் இன்னொரு சமூகத்துக்கும், பேரினத்துக்கும் சிறுபான்மையினத்துக்கும் என்றெல்லாம் பல்வேறு பட்ட சமூக வன்முரண்பாடுகள் இன்று நிலவி வருகின்றன. அப்படியான சமூக வன்முரண்பாடுகளிலே சம்பந்தப்பட்டுள்ள பணயப்பங்காளிகள் பலர். அவர்களுள் பிரதானமான ஆறு வகையினரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

வன்முரண்பாடுகளை விளைவிப்போர் (மு.வி.) அவர்களுள் முக்கிய இடத்தை வகிப்பார்கள். அரச மற்றும் தீவிரவாத ஆயுததாரிகள், சமூகத் தலைவர்கள் (அரசியல்வாதிகள் உள்ளிட) போன்றவர்கள் இதற்குள் அடங்குவார்கள்.

அடுத்ததாக, எரியும் வன்முரண்பாடுகளுக்கு எண்ணெய்வார்த்து அதனை மோசமாக்கும் நாசமனநிலைப்பாடுள்ள தீவிரப்போக்காளர்கள் (நா.தீ). பக்கச்சார்பான நிலைப்பாடுகளை எடுக்கும் கல்விமான்கள், சட்டவியலாளர்கள், மதத் தலைவர்கள், ஒரு சில பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், குண்டர்கள் ஆகியோர் இதற்குள் அடங்குவார்கள்.




இப்படியான வன்முரண்பாடுகளால் நன்மைபெறும் குழுவினர் (ந.கு.) அடுத்த பங்காளிகள். எரிகிறவீட்டிலே பிடுங்கியது மிச்சம் என்பதுபோல அவர்கள் வன்முரண்பாடுகளின்போது பலவிதங்களிலும் அதனால் நன்மை பெறுபவர்கள். அரசியல்வாதிகள், வியாபாரிகள், வன்முரண்பாடு விளைவிப்போருக்குள் உள்ள சந்தர்ப்பவாதிகள், ஆயுத வர்த்தகர்கள், கடத்தற்காரார்கள் என்றெல்லாம் பல்வேறு வகையினர் இதற்குள் அடங்குவார்கள்.

வன்முரண்பாடுகளால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிகப்படும் பொதுமக்கள் (பா.பொ.) அடுத்த பணயப்பங்காளிகள். அப்பாவிகளான அவர்கள் நேரடியாக வன்முரண்பாட்டிலே சம்பந்தப்படாவிட்டாலுங்கூட, வன்முரண்பாட்டின் அமைவிடத்திலோ அல்லது வன்முரண்பாட்டுக்குழுக்களின் ஆதிக்கத்திலோ உள்ளதால் அவர்கள் பாதிக்கப் படுகின்றனர். அவர்கள் அடையும் பாதிப்புக்கள் உயிரிழப்புக்கள் (கொலை, தற்கொலை) தொடக்கம்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமூக வன்முரண்பாட்டின் பணயப் பங்காளிகள்

காணாமற்போதல், அங்கவீனமடைதல், காயம்படுதல், சொத்திழத்தல், இடம்பெயர்தல், கைதுசெய்து அடைக்கப்படுதல், கற்பழிக்கப்படுதல், வறுமையடைதல், மன அழுத்தங்களுக்கு உள்ளாதல் என்றெல்லாம் பல்வேறு மட்டங்களைக் கொண்டதாய் இருக்கும். வன்முரண்பாடுகளின்போது அவர்களது குரல்கள் கேட்கப்படுவதில்லை, அவர்களின் நிஜமான பாதிப்புக்கள் பற்றிய உண்மைகள் தெரியவருவதுமில்லை.

வன்முரண்பாடுகளைத் தணித்து சமாதானத்தை ஏற்படுத்த விளையும் சமாதானத் தூதுவர்கள் (ச.தூ) அடுத்த பயணப்பங்காளித் தரப்பினர். வன்முரண்பாட்டுக் குழுக்களிடைய சமாதான ஒப்பந்தங்களை ஏற்படுத்தி புரிந்துணர்வுகளைத் தருவிக்க அவர்கள் பல்வேறு மட்டங்களிலே செயற்படுவதுண்டு. இப்படியான சமாதானத் தூதர்கள் சர்வதேச மட்டத்தினராயோ அல்லது புத்தீ ஜீவிகள், மதத் தலைமைகள் போன்ற உள்ளகத்தினராயோ, அல்லது சிறு அளவிலான ஒரு சில களமட்ட முயற்சியாளர்களாகவோ இருக்கலாம்.

இறுதியாக இவைகள் எதிலுமே சம்பந்தப்படாத பார்வையாளர் கூட்டத்தினர் (பா.கூ). இவர்கள் தாமுண்டு தம் வேலையுண்டு என்பதுபோல நடந்துகொள்ளும் போக்கினர். 'அவர்கள்', 'நாங்களோ' என்று தங்களை 'அவர்களில்' இருந்து வேறுபடுத்தும் குழுவினர் இவர்கள். மதப்பிரசங்கள், மத அனுட்டானங்கள், களியாட்டுகள், உல்லாசப் பயணங்கள் போன்றவைகளே இவர்களது கரிசினையாக இருக்கும்.

இலங்கையிலே கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும் வன்முரண்பாடுகளைப் பின்னிட்டுப்பார்த்தால் இந்த ஆறு வகைகளுக்குள்ளும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவருமே வேறுபட்ட அளவுகளிலே தொடர்புபட்டவர்களே! பொதுவாகப் பார்த்தால் பெரும்பாலன கிறிஸ்தவர்கள் பா.கூ. ஆகவும், ஒரு சிலர் ச.தூ. ஆகவும் கணிசமானோர் பா.பொ. ஆகவும் ஏனைய சிற்சிலர் மு.வி. ஆகவோ, நா.தீ. ஆகவோ அல்லது , ந.கு. ஆகவோ இருந்திருப்போம்.

**உங்கள் பிரயோகத்துக்கு**

பின்வருவனவற்றிலே விகிதாசாரப்படி கணிப்பிட்டால் உங்களது ஈடுபாடு அளவுகள் எப்படி இருந்துள்ளது?

| பங்கு வீதம் | மு.வி. | நா.தீ. | ந.கு. | பா.பொ. | ச.தூ. | பா.கூ. |
|---|---|---|---|---|---|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய நிலைமை

எந்த சமூக வன்முரண்பாடுகளும் நித்தியமானவைகள் அல்ல. இதற்கு எண்ணற்ற சரித்திரச் சான்றுகள் உள்ளன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆட்சிகளை அமர்த்துபவரும் தள்ளுபவருமான கர்த்தரின் ராஜரீகம் பற்றிய எமது நம்பிக்கை இலவம்பழமல்ல. மு.வி. களின் பிரச்சினைகளிலே ந.கு. ஆக இருந்து பல நா.தீ. களின் ஆதரவைப் பெற்றுவந்த ஆட்சி அகற்றப்பட்டு, நல்லாட்சி என்பதை இலக்காகக் கொண்ட ஒரு ஆட்சியின் முயற்சியிலே தற்போது முண்பாடுகள் இல்லாது ஒழிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை தோன்றியுள்ளது. இதனைக் கிறிஸ்தவர்கள் கண்டுகொள்ளாமல் அவற்றை வெறும் அரசியல் என்ற பார்வையிலே ஒதுக்கி வைத்துவிட்டு பா.கூ. களாக இருக்கவேண்டுமா? நாம் ஆராதிக்கும் தேவன் அரசியலுக்கும் கர்த்தரா இல்லையா என்பதே இதிலே தொக்கிநிற்கும் அடிப்படையான கேள்வி! அவர் அரசியலுக்கும் கர்த்தர் என்று கூறுவோமாயின், நாம் அதைப்பற்றிய கவனமற்றவர்களாக இருப்பதெப்படி? தகுந்த சந்தர்ப்பத்திலே நாம் செயற்படாது போனால் அதற்கான விளைவுக்குப் பொறுப்பாளிகள் நாமே! காலங்களைப்பற்றிய பிரசங்கிகள் நூலின் போதனை, "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழ் இருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயம் (வாய்ப்பு) உண்டு" என்று ஆரம்பித்து, இறுதியிலே "யுத்தம் பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம் பண்ண ஒரு காலமுண்டு" என்று முடிகிறது (பிர. 3:1-8). காலத்தை (வாய்ப்பை) பிரயோசனப்படுத்தும்படி வேதம் நமக்கு அறைகூவல் விடுக்கிறது (எபே. 5:16). இது அரசியற் காலங்களுக்கும் (வாய்ப்புகளுக்கும்) பொருந்தும்.

**உங்கள் பிரயோகத்துக்கு**

சமூக மாற்றங்கள் மற்றும் அரசியற் போக்குகள் போன்றவைகளைப்பற்றிய உங்களது மனக்கருத்து என்ன?

## நிலைமாற்றுக்காலநீதீ

இலங்கையிலே நிலைமாற்றுக்கால நீதி (Transitional Justice) எனும் இந்தப் பதம் தற்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. பெருமளவிலான மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள், போர்க்குற்றங்கள், மனுக்குலத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் மற்றும் இன அழிப்பு போன்றவைகள் இடம்பெற்ற சூழ்நிலைகளிலே அவைகளைப் பற்றிய உண்மைகளை அறிந்து, பா.பொ. களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுத்து, மு.வி. களிலே அதற்குக் காரணமாய் இருந்தவர்களுக்கு உரிய நீதித்தீர்ப்பை வழங்கி, இனிமேல் அப்படியான ஒரு நிலைமை ஏற்படாததை உறுதிசெய்யும்படிக்கு அனைத்துத் தரப்பினருக்கும் உணர்வூட்டும் ஒரு பொறிமுறையே அது. இதிலே நீதித்துறைசார் நடவடிக்கைகளும் நீதித்துறை சாராத நடவடிக்கைகளும் உள்ளடங்கியிருக்கும். தென் ஆபிரிக்காவிலே உண்மை அறியும் மற்றும் நல்லுறவேற்படுத்தும் ஆணைக்குழுவிலே (Truth and Reconciliation Commission, TRC) பேராயர் டெஸ்மன்ட் டூட்டு, நேல்சன் மண்டேலா போன்ற பல கிறிஸ்த்தவத் தலைவர்களின் ஈடுபாடு அங்கே நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வழிவகுத்ததை நாம் அறிவோம். அவர்களது ஈடுபாடு வெறும் மனுஷீகச் சிந்தனையால் விளைந்ததல்ல; அவர்களது கிறிஸ்தவ நம்பிக்கையின் வெளிப்பாடே அவை. தேவன் நீதியுள்ளவர் என்பதை அவர்கள் திடமாக நம்பினார்கள். நீதி என்பது வெறுமனே தேவசித்தத்தின் விளைவு அல்ல. மாறாக அது அவரது மாறாத தன்மை, அவரது குணாம்சம். தென்னாபிரிக்க வன்முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையிலே தீவிரமாக ஈடுபட்ட ஒரு கிறிஸ்தவ விசுவாச சகோதரி ஆலயத்திலே ஜெபிக்குப்போது, "வன்முறைக்குப் பொறுப்பானவர்களைத் தேவன் தொட்டு வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க இயலாதவராய் இருப்பாரேயாயின், தேவன் நீதியுள்ளவர் என்று வேதாகமத்திலே கூறும் பக்கங்களையெல்லாம் நான் கிழித்து எறிந்துவிடுவேன்" என்றாராம்! அந்தளவுக்கு அவர்களின் நம்பிக்கை இருந்தது.

வன்முரண்பாடுகள் பல்வேறு காரணங்களால் விளைந்து, பல்வேறு தாக்கங்களால் கூர்மையடைந்து பல்வேறு விதங்களிலே விகாரப்பட்டுச் சிக்கலானதாய் இருக்கலாம். ஆனாலும் நாம் விசுவாசிக்கும் தேவன் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை, நீதி, ஆகியவற்றை மட்டுமன்றி மன்னிப்பு, ஒப்புரவு, போன்றவற்றையும் கற்பிக்கிறவரும் அவற்றை எமது வாழ்விலே செயற்படுத்துபவருமானவர். எனவே நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறையிலே கிறிஸ்தவர்கள் பல்வேறு கட்டங்களிலே பல்வேறு விதங்களிலே ஈடுபடவேண்டியது அவசியம். அடிப்படையிலே இதைப்பற்றிய விழிப்பறிவை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். மெய்யான நல்லிணக்கத்துக்குக் கிறிஸ்தவர்கள் வழங்கக்கூடிய பங்களிப்பு நிறையவே உண்டு. அவர்களால் விளையும் நல்லிணக்கம் இந்தப் பொறிமுறைகளின் நல்லிணக்க நோக்கங்களுக்கு எதிரானவைகளாக இராமல், அவற்றுக்கும் அப்பாற்செல்லவல்லது. அப்படியிருக்க அந்தப் பொறிமுறையைப் பற்றிய அறிவும், அவை விளைவிக்கும் சமூகமாற்றங்களும் பற்றிய அறிவை கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானதல்லவா?

**உங்கள் பிரயோகத்துக்கு**

இடம்பெற்ற வன்முரண்பாடுகளைச் சரியானபடி கையாண்டு, இனிமேலும் அவை இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தவென முன்னெடுக்கப்படும் முயற்சிகளான உண்மை அறிதல், பொறுப்பானவர்களுக்கு நீதித்தீர்ப்பு வழங்குதல், வெகுஜன விளிப்பறிவை ஏற்படுத்துதல், பரஸ்பர ஒப்புரவை ஏற்படுத்துதல் ஆகியவற்றிலே நீங்கள் வகிக்கக்கூடிய பங்குகள் எவை?

## எமது பொறுப்பு

சமூக வன்முரண்பாடுகள் பற்றியும் அவை மழுங்கடிக்கப்பட்டு நல்லிணக்கம் ஏற்படும் வாய்ப்புக்கள் பற்றியும் போதிய கிறிஸ்தவ இறையியல் தளங்கள் விருத்தியாகப்படவில்லை. ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சில இறையியற்தளங்கள் கிறிஸ்தவ அடித்தளங்களைத் தகர்த்து, கிறிஸ்துவைப்பற்றிய உபதேசத்தை உரிந்து (நிர்வாணமாக்கி), சமூகவியற் கொள்கைகளைப் பற்றிக்கொண்டு அவற்றுக்கு இறையியற் சாயம் பூசுவனவாகவே உள்ளன. கிறிஸ்தவ விசுவாசத்தை மாற்றுவதற்காக அல்ல, மறாக, நாம் "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் (சமூக வன்முறைகள் உட்பட) நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் (மேலே ஆராய்ந்த ஆறு பணயப்பங்காளிகளின் எண்ணப்போக்குகள் உட்பட) கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம்" (2 கொரி 10: 5). இது அரண்களையே நீர்மூலமாக்கும்படி எம்மிலே செயற்படக்கூடிய தேவ பெலன். இதைப்பற்றிய ஆளமான இறையியற்தளத்தை எமது சமகால இறையியலாளர்கள் உருவாக்கவேண்டிய அவசியம் உள்ளது.

சமூக வன்முரண்பாடுகளின் பணயப்பங்காளித்துவங்களுக்குள் நாம் வகித்துவந்த உசிதமற்ற பங்குகளை (குறிப்பாக பா.கூ.) நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். பாவம் செய்வதால் மட்டும் விளைவதல்ல, செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுவதாலும் விளையும். "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாய் இருக்கும்" (யாக். 4:17). தீமையின் வெற்றிபற்றி பேர்கே என்பவர் குறிப்பிடுகையிலே, "தீமை செழித்தோங்குவதற்கு நன்மை செய்வோர் பேசாமல் இருப்பதே தேவை" என்றார். பேசவேண்டிய இடத்திலே பேசாதிருப்பதும், செயற்படவேண்டி காலத்திலே வாழாதிருப்பதும், கவனிக்கவேண்டியவைகளைக் கவனிக்காது விடுவதும் அனைத்துமே தீமையின் செழிப்புக்கு நாம் இடும் பசளைகளே. இவற்றை மனதிற் கொண்டவர்களாய், மெய்யான நல்லிணக்கத்துக்கு எமது பங்களிப்புக்களை நாம் வழங்கும்படி எமது பா.உ. இலிருந்து நாம் வெளிவரவேண்டும். அதைப்பற்றிய தரிசனம் எமக்கு இருக்கவேண்டும். "தரிசனம் இல்லாத இடத்திலே மக்கள் சீர்கெட்டுப்போவார்கள்.." (நீதி. 29:18. பழைய தமிழ் மொழிபெயர்ப்பு தீர்க்கதரிசனம் என்று கூறுவது திருத்தப்படவேண்டும்).

**உங்கள் பிரயோகத்துக்கு**

விகிதாசாரப்படி பின்வருவனவற்றிலே உங்களது ஈடுபாடு இனி எப்படி இருக்கவேண்டும் என வாஞ்சிக்கிறீர்கள்?

| பங்கு | மு.வி. | நா.தீ. | ந.கு. | பா.பொ. | ச.து. | பா.கூ. |
|---|---|---|---|---|---|---|
| வீதம் | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கிறிஸ்தவர்களும் ஐசுவரியவான்களாவது தேவசித்தமா?

ஆங்கில உரை: **கலாநிதி அஜித் ஃபெர்னான்டோ**

தமிழாக்கமும் கட்டுரைவடிவமும்: ஆசிரியர்

**சென்ற இதழில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி பாகம் 2**


ஆயினும் செல்வத்திரட்சியைப்பறி வேதாகமம் முழுமையாக ஒரு எதிர்மறையான அனுகுமுறையைக் கொண்டதும் அல்ல. இயேசு கூறினார், "பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" (மத். 6:20). இந்தக் கூற்றானது பொக்கிஷங்களையிட்டு என்ன செய்வது என்ற பின்புலத்திலே கூறப்பட்டது. வியாபார உலகினுக்குப் பரிச்சயமான மொழிநடையைப் பயன்படுத்தி இயேசு ஆலோசனையாகத் தெரிவிப்பது என்னவென்றால் மிகவும் பாதுகாப்பான இடத்திலே, பரலோகத்திலே, காத்திரமான முதலீட்டைப் போடும்படியாக. நாம் நித்திய செல்வச்செழிப்பைத் தொடரவேண்டியவர்கள் – அதைத்தான் பிரசங்கிகளாகிய நாம் கிறிஸ்தவர்கள் மத்தியிலே ஊக்குவித்திட வேண்டும்.



1 தீமோ. 6 இலே பவுல் செல்வச்செழிப்புள்ளவர்களைப் பார்த்துத்தான் தயாள குணத்திலும் செல்வந்தராய் இருக்கும்படி கேட்கிறார்: "நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான் களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர்களாய் இருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங் காலத்துக்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (6:18-19). இந்தப் பகுதி பரலோகத்திலே பொக்கிஷங்களை வைப்பதைப்பற்றிக் கதைக்கிறது. அங்கேதான் எமது பொக்கிஷம் இருக்கவேண்டும். தேவையுள்ளவர்கள் விடயத்திலே எமது தயாளச்செய்கைகளால் பரலோக வங்கியிலே நாம் முதலீடு செய்கிறோம். ஆரம்பத்திலே 1 தீமோ 6 இலே செல்வச்செழிப்பு என்பது அல்ல, மாறாக தெய்வீகத்தன்மையும் திருப்தியுமே பெரிய விடயம் எனக் கூறியிருந்தோம். இப்போது அவர் கூறுகிறார் தயாளமாய்க் கொடுப்பது இன்னுமொரு பெரிய விடயம். கொடுப்பது பற்றிய வேதாகமத்தின் பல போதனைகள் காண்பிப்பது என்னவென்றால், வேதாகம கிறிஸ்தவனுக்கு, கொடுத்தல் என்பது வாழ்வின் பெரிதான இலட்சியங்களுள் ஒன்று என்பதையே. மக்கெதோனிய கிறிஸ்தவர்கள், "தங்கள் உபகாரத்தையும் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்" என்று பவுல் கூறுகிறார்.

எருசலேம் சபையின் தேவைகளுக்காகப் பங்களிப்புச் செய்யும்படி கொரிந்திய கிறிஸ்தவர்களை நெருக்கி ஏவுகையிலே, பவுல் "மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன்" என்று கூறுகிறார். கிறிஸ்தவர்களை நெருக்கித்தள்ளும் இன்னும் ஒரு காரியம் இங்கே தொனிக்கிறது: பாரிய சமநிலையின்மை நிலவும் இவ்வுலகிலே, ஒருவித சமநிலையை ஏற்படுத்தும்படிக்கு நாம் தயாளமாய்க் கொடுப்பதே அது. சமநிலைக்கான இந்த அவசரத் தேவையானது பல கிறிஸ்தவர்களை ஆடம்பரச் செலவீனங்களைத் தவிர்த்து தேவனுடைய பணிக்காகவும் தேவையுள்ளவர்களுக்கும் இயலுமானவரைக்கும் கொடுக்கும்படிக்கு எளிமையான ஒரு வாழ்க்கைமுறையைக் கைக்கொள்வதற்கான தீர்மானத்தை எடுக்கும்படி செய்துள்ளது. ஒருவர் கூறியுள்ளபடி, "நாம் எளிமையாக வாழ்கிறோம் எளிய நிலையில் உள்ள மற்றவர்கள் வாழும்படியாக". எளிமையான வாழ்க்கைமுறைக்கு ஆதாரமாக இயேசுவின் கூற்றினை நாம் பார்க்கலாம், "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்.." (மத்: 6:19). குறிப்பாக உலகிலே உள்ள மோசமான வறுமையை நோக்குகையிலே நாம் சீரியஸாகக் கருத்திற் கொள்ளவேண்டிய கூற்று இது.

புதிய ஏற்பாட்டின் பல கதாநாயகர்களும் அர்ப்பணமுள்ள மக்களும் வறியவர்களாகவே இருந்துள்ளனர். இயேசுவே எமது பிரதான உதாரணமும் கதாநாயகனும். அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாக ஆகும்படிக்கு அவர் எங்கள் நிமித்தம் தரித்திரனானார் (2 கொரி 8:9). அவர் "தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார்.." (இதிலே அடிமை என்பதன் கிரேக்கச் சொல்லின் சரியான அர்த்தம் ஏவலடிமை) (பிலி. 2:7). அப்படிச் செய்யததால், நாம் சாபத்தின் கீழ் வாழாதிருக்கும்படியாக இயேசு சாபத்தைத் தன்னிலே ஏற்று, அதன்படி அவரைப்போல நாம் பாடுபடத் தேவையில்லாதபடி செய்தார் எனச் சிலர் கூறுவதுண்டு. ஆனால் மேற்படியான இரு பகுதியிலுமே நாம் பின்பற்றவேண்டிய உதாரணமாகவே இயேசுவைப்பற்றிய அந்த அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விடயத்திலே தனது வாஞ்சையைப்பற்றிப் பவுல் "..அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்துக்கு ஒப்பான மரணத்துக்கு உள்ளாகி.." (பிலி. 3:10) என்று தெரிவிக்கிறார். கிறிஸ்து பாடுபட்டதுபோல நாமும் பாடுபட்டால் நாம் கிறிஸ்துவுடன் ஆளமாக அனுபவிக்கக்கூடிய ஒரு ஐக்கியம் அங்கே உள்ளது. எமக்கு கிறிஸ்துவுடனான ஐக்கியமே மிகப்பெரிய சொத்து.

இயேசுவைப் பின்பற்றிய பாராட்டப்படக்கூடியவர்களுள் அநேகர் வறியவர்கள். பவுல் தன்னைப்பற்றிக் கூறும்போது, "...தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக ஆக்குகிறவர்களாவும், ஒன்றும் இல்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும்.." இருப்பதாகக் கூறுகிறார் (2 கொரி. 6:10). தமது வறுமை நிலையிலும் உதாரமாகக் கொடுத்தமையாலேயே மக்கெதோனியர்கள் அங்கே ஹீரோக்கள்: "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த தரித்திரம் உடையவர்களாய் இருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சியாய் இருக்கிறேன்." (2 கொரி 8:1-3). இந்த தரித்திரக் கிறிஸ்தவர்களின் கொடுத்தலானது "செழிப்பு" என விபரிக்கப்பட்டுள்ளது (குறிப்பு: "மிகுந்த உதாரத்துவம்"... என்பதன் மூல மொழிபெயர்ப்பு, செழிப்பான உதாரத்துவம் என்பதாகும்; திருவிவிலியகம் இதனை "வள்ளன்மையோடே வாரி வழங்கினார்கள்" என்று மொழிபெயர்த்துள்ளது). செல்வந்தர்களை தரித்திரரிலும்பார்க்க மேம்பட்டவர்களாகக் கருதிய சபையைக் கண்டிக்கும்போது யாக்கோபு கூறுவது என்னவென்றால், "என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா?" (யாக்கோபு 2:5).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்திர விசுவாசிகள் உண்மையிலேயே ஐசுவரிவான்கள்!

வெளிப்படுத்தல் நூலிலே, ஏழு சபைகளுக்கான மடல்களிலே, ஆக இரண்டு சபைகள்தான் எவ்விதமான கண்டனத்தையும் பெறாத சபைகள். அந்த இரண்டு சபைகளுமே உலகம் பொருண்மிய வெற்றி என்று சிந்திப்பதைக் கொண்டிராதவைகளாகவே விபரிக்கப்படுகின்றன. முதலாவது சபை சிமிர்னா. தூதன் அவர்களது "வறுமை"யைப்பற்றிக் கதைத்துப் பின்பு உடனடியாகக் கூறுவது என்னவென்றால், "நீ ஐசுவரியமுள்ளனவன்" (வெளி. 2:9). இரண்டாவது சபை பிலதெல்பியா. அது 'கொஞ்சம் பெலன்" உள்ள சபையாக வர்ணிக்கப்படுகிறது (வெளி. 3:8). உலகத்துக்கு ஒத்தவாழ்வு வாழ்ந்துவந்த காலத்திலே தேவன் அங்கீகரித்த இரண்டு வாழ்க்கைமுறைகளைக் கொண்ட இரு புறநடையான சபைகளாகத் திகழ்ந்தவை அவைகள் தரித்திரமானவையும் பலவீனமானவையும்! இந்தப் பகுதிகளிலெல்லாம் வறிய கிறிஸ்தவர்கள் அவர்கள் ஐசுவரியவான்கள் என்ற கருத்துப்பட விபரிக்கப்பட்டுள்ளது ஆர்வமூட்டுவதாயில்லையா? கிறிஸ்தவ அறிமுக அடையாளத்தின் முக்கியமான ஒரு அம்சம் அவர்கள் ஐசுவரியவான்கள் எனும் ஒரு உணர்வு. எமது அறிமுக அடையாளத்தைப்பற்றி நாம் சந்தோஷமாய் இருந்தால், நாம் நிச்சயமாகவே சந்தோஷமான மக்களாய் இருப்போம். எனவே தரித்திரர் மெய்யான சந்தோஷமான மக்களாக இருக்கலாம்.



எருசலேமில் உள்ள தாய்த்திருச்சபையானது பிரதானமாக வறிய மக்களைக் கொண்டதாகவே இருந்துள்ளது. அதனால் வேறு சபைகள் அவர்களுககு உதவவேண்டியதாய் இருந்தது. அவர்களது நம்பிக்கையிலேயோ அல்லது அவர்களது செயற்பாட்டிலேயோ ஏதோ பிழை இருந்தபடியால் அவர்கள் தரித்திரராய் இருந்தார்கள் என்று சொல்வதற்கு அங்கே எதுவுமே இல்லை. அது எருசலேமிலே பொருளாதாரக் கடினம் நிலவிய காலம். மேலும் ஒய்வுபெற்றபலர் அவர்கள் கிறிஸ்தவர்களாக ஆகும்போது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சமூக நிவாரண நலன்களை இழக்கவேண்டி நேரிட்டிருக்கும். எனவே எருசலேம் கிறிஸ்தவர்கள் பாரிய பொருளாதாரத் தேவைகளுடன் இருந்தனர். உலகின் பிற பாகங்களில் இருந்த கிறிஸ்தவர்கள் தமது தூதுவக் கொடுத்தலூடாக அந்தத் தேவையைச் சந்தித்தனர்.

பழைய ஏற்பாட்டிலே தேவனுக்கு விசுவாசமுள்ளவராய் இருந்தால் ஐசுவரியம் ஒரு ஆசீர்வாதமாக வாக்குப் பண்ணப்பட்டிருப்பது உண்மைதான் (உ+ம்: உபா. 28:11). ஆனாலும் இந்த வாக்குத்தத்தங்கள் பழைய உடன்படிக்கையின்கீழ் நீதியான ஒரு தேசத்துக்கு வாக்குப்பண்ணியவை என்பதை நாம் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். தேசத்திலே தீயவர்கள் செழித்தோங்க நீதியாய் நடப்பவர்கள் தரித்திரராய் இருப்பதன் வேதனையையிட்டுப் பழைய ஏற்பாடு அடிக்கடி விபரித்துப் புலம்புவதையும் நாம் பார்க்கலாம். சங்கீதத்திலே வரும் பல புலம்பல்கள் இவற்றைக் குறிப்பிட்டுப் புலம்புவதுண்டு. சங்கீதம் 73 இதற்குச் சிறந்த உதாரணம். அந்த சங்கீதத்தை எழுதிய ஆசாப், தனக்கு இருந்த குறைவினை தீயவர்களின் செழிப்புடன் ஒப்பிட்டு மனத்தளவிலே தத்தளிக்கிறதை வாசிக்கலாம். தீயவர்கள்மீது தேவனின் நீதியான தீர்ப்பைப் பற்றி உணர்ந்தபின்புதான் அவரது தத்தளிப்புக்குத் தீர்வைக் கண்டுகொண்டார். யோபு மற்றும் ஆபகூக் ஆகிய நூல்கள் மோசமான வேதனைகள் மத்தியிலும் தேவன்மீதுள்ள நம்பிக்கையை விட்டுக்கொடுக்காமல் அவரைக் கனம்பண்ணிய மெய்யான விசுவாச மக்களைப்பற்றித் தெரிவிக்கிறது. பழைய ஏற்பாடு நீதிமான்களுக்குச் செல்வச்செழிப்பை உறுதிபடுத்தித் தெரிவிக்கவில்லை. உண்மையிலேயே, புதிய ஏற்பாட்டைப்போலவே, ஐசுவரியத்தின் ஆபத்துக்களைப்பற்றி அடிக்கடி மக்களுக்கான எச்சரிப்புக்கள் அதிலும் உண்டு (உ+ம்: உபா 6:10–25; 8:11–20; 32:15–18).

கிறிஸ்தவர்கள் உண்மையிலேயே தரித்திரராய் இருந்து தத்தளித்தபோதுதான் சபையின் மிகப்பெரும் வளர்ச்சிகள் சில இடம்பெற்றதாகச் சரித்திரம் காண்பிக்கிறது. அண்மைய காலங்களிலே சீனா, நேபாளம் மற்றும் கொரியா (சபையின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டங்களிலே) ஆகிய இடங்களிலே இது உண்மையாக இருந்துள்ளது. தற்போது ஈரானிலே சபையின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. சிறுபிள்ளைபோன்ற நம்பிக்கை போன்றதான பல



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகைமைகள் தரித்திரருக்குத் தமது வாழ்விலே வளர்த்துக்கொள்வது மிகவும் இலகுவானதாக இருக்கும். செல்வந்தர்கள் தேவனுடைய ராச்சியத்துக்குள் பிரவேசிப்பது மிகக் கடினம் என இயேசு கூறியதற்கு இதுவும் ஒரு காரணம்.

பாராட்டப்பெற்றவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. மறுபுறத்தே நாம் மேலே பார்த்த பிரகாரம் பவுல், மக்கெதோனிய கிறிஸ்தவரகள் மற்றும் சிமிர்னா சபை போன்ற வாழ்விலே செழிப்பான ஆயினும் உலக சொத்துக்களைப் பொறுத்தவரைக்கும் தரித்திரரான தேவ மக்களும் உண்டு.


ஐசுவரியமுள்ள விசுவாச மக்களுக்கு தேவனுடைய திட்டத்திலே முக்கிய வகிபங்கு உள்ளதாக வேதம் கற்பிக்கிறது என்பதிலே எவ்வித ஐயமும் இல்லை. வேதாகமத்திலே காணப்படும் சில உதார புருஷர்களான ஆபிரகாம் (ஆதி. 13:2), பர்சிலா (2 சாமு. 19:32), எலிசாவுக்கு உதவி சுன்னேமியப் பெண் (2 ராஜா. 4:8), அரிமத்தியா ஊரானான யோசேப்பு (மத். 27:57), போன்றவர்கள் குறிப்பாக ஐசுவரியவான்கள் என விபரிக்கப்பட்டுள்ளனர். ஐசுவரியம் உள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை உடையவர்களாய் இராதிருக்கும்படி பகுல் கூறியபின்பு, "...நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்..." என்று கூறுகிறார். பணம் வாங்கக்கூடியவற்றைச் சந்தோஷமாக அனுபவிப்பது தவறல்ல. மேலே குறிப்பிட்ட நான்கு ஐசுவரியமுள்ள தேவமக்களும் அவர்களது தயாள குணத்துக்காகப்



ஐசுவரியமுள்ள கிறிஸ்தவர்கள் செல்வச்செழிப்பாய் இருக்கும் அதேவேளை தாழ்மை, தயாளம், மற்றும் தெய்வீகத்தன்மை ஆகியவற்றினூடாக கிறிஸ்துவைக் கனப்படுத்தலாம். தரித்திர கிறிஸ்தவர்கள் வறுமையாய் இருக்கும் அதேவேளை, திருப்தி மனப்பான்மை, முழுமையான விசுவாசம், தயாளம் மற்றும் தெய்வீகத்தன்மை ஆகிவற்றால் கிறிஸ்துவைக் கனப்படுத்தலாம். வேதாகமத்திலே ஐசுவரியம் என்பது ஒரு பொருட்டல்ல என்பது தெளிவு. திருப்தி, களிப்பு, சமாதானம், பரிசுத்தம், அன்பு, தயாளம் போன்றவைகளே வேதாகமம் எப்போதுமே முன்வைத்துப்பேசும் பொருட்டான காரியங்கள். இந்தக் குணாதியங்களைக் கொண்டுள்ள மக்கள், அவர்கள் பொருளாதாரப்படி செல்வந்தர்களாகட்டும் தரித்திரர்களாகட்டும், அவர்களே மெய்யான செல்வச்செழிப்புள்ள ஐசுவரியவான்கள்.

# தேவனுடைய செட்டைகள்

## அனுப்பியவர் லலித் செல்லையா



யெலோஸ்ரோன் தேசியப்பூங்காவிலே காட்டுத்தீ பரவிப் பெருமுயற்சியின்பின்பு அது அணைக்கப்பட்டது. உடனேயே தீயினால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடும்படி அந்தப் பூங்காவின் மலைக்கு வனத்துறை அலுவலர்கள் சென்றனர். அவர்களுள் ஒரு அலுவலர், ஒரு இடத்திலே ஒரு பறவை ஒரு மரத்தின் அடியிலே குப்புறப்படுத்த நிலையிலே சாம்பலாகிக் கிடந்ததை அவதானித்தார். தனது தடியினால் அதைத் தட்டித்திருப்பியபோது அதற்குக்கீழிருந்து மூன்று குஞ்சுகள் தத்தித்தத்தி வெளியேறின. புகை செறிந்து வந்தபோது மரத்திலே கூட்டுக்குள் இருந்த குஞ்சுகளை அந்தப் பறவை மரத்துக்குக்கீழே கொண்டு வந்து தனது செட்டைகளின்கீழ் அணைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்று அவர் ஊகித்தார். அந்தப் பறவை தனது குஞ்சுகளை விட்டுவிட்டுத் தன்னைப் பாதுகாத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் தாய்ப்பாசமுள்ள அந்தப் பறவையோ தன்னால் இயலுமானவரைக்கும் தனது குஞ்சுகளைப் பாதுகாப்பதிலே தீர்க்கமாய் இருந்து, அவைகளைத் தனது செட்டைகளின்கீழே அணைத்துத் தான் மரிக்கவும் அவைகளைப் பிழைக்கச்செய்யவும் எண்ணம் கொண்டிருந்தது.

"அவர் தம் சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்.." (சங். 91:4)

தேவனால் இவ்வளவாய் நேசிக்கப்படுதல் உங்களது வாழ்விலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் அல்லவா? உங்களை நேசிப்பவர் இன்னார் என்பதையும் அதனால் அதிலுள்ள வேறுபாட்டையும் நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியக் கரிசனைத் தட்டு

ஊழியத்தில் வரும் சவால்களைச் சந்திப்பதற்கு உதவிடும்படிக்கு சில அத்திபாரங்களைத் தருவதும், சில அத்திபாரங்களை மீள ஞாபகப்படுத்துவதற்குமான கட்டுரைகளைத் தாங்குவதற்கே இத்தட்டு உள்ளது.

# வீழ்ந்துபட்டுள்ள உலகில் இயேசுவைப் பின்பற்றுதல்


## வண.கலாநிதி. றொபேட் சொலமன், பேராயர்

தமிழாக்கம்: **ஆசிரியர்**


வண.கலாநிதி. றொபேட் சொலமன் சிங்கப்பூர் மெதடிஸ்தப் பேரவையின் பேராயர். அவர் வைத்தியக் கலாநிதியுமாவார். சிறந்த எழுத்தாற்றலுள்ள அவர் பல நூல்களையும், பல சஞ்சிகைகளுக்கும், இறையியற் களஞ்சியங்களுக்கும் கட்டுரைகளையும் வரைந்துள்ளார். அவர் எழுதிய நூல்களுள் ஒன்றுதான் "Following Jesus in a Fallen World." ஆங்கிலத்தில் அமைந்த அந்த நூலைத் தமிழாக்கம் செய்து பேழைப்புறாவிலே தொடர்கட்டுரையாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி கோரியபோது அதை மனமுவந்து வழங்கியது, வாசகராகிய உங்களுக்கும் ஆசிரியரான எனக்கும் கிடைத்த அரும்பெரும் சலாக்கியமாகும். இந்த சஞ்சிகையிலே 'துன்புறுதல்' எனும் தொடரில் மேலும் சில கட்டுரைகள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அவரது நூலின் பகுதிகள் காலத்துக்கு ஏற்ற ஒரு சிந்தனையாகவும், ஆய்வாகவும், புரிந்துகொள்ளுதலாயும் இது அமையும். வாசிப்போம். பயன்பெறுவோம்.

## வேதனைக்கான மருந்தும் ஊசியும்

எதிர்காலத்தை நாம் முன்னறிவித்திடக்கூடுமா? எதிர்காலத்திலே நடப்பவைகள்மீது நாம் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க முடியுமா? இந்நாட்களிலே இது சாத்தியமா என்பதை நம்புவது மிகக் கடினம். ஆனால் முன்னொரு காலத்திலே கணிதமேதையும் வானவியல் நிபுணருமான வ பியரி லப்லாஸ் என்பவர் எமது பேரண்ட சராசரத்திலே உள்ள விசைகள் அனைத்தையும், சகல இயற்கை உடல்களினதும் தற்போதைய அமைவிடத்தையும்பற்றி மிகத்துல்லிமாக நாம் அறிந்து கொண்டோமேயானால், எமக்கு எதிர்காலத்தையிட்ட எதுவுமே நிச்சயமற்றதாக இராது. எமது கணிப்பீட்டுத் திறமையால் அவற்றை நாம் சரியாக அறிந்தவர்களாக வாழலாம் என்று கூறிவைத்தார்.

இது சாத்தியமல்ல என்பதை நாம் அறிவதற்கு ராக்கெட் விஞ்ஞானிகளாக நாம் இருக்கவேண்டியதில்லை. எமது உள்ளுணர்வே இது சாத்தியமற்றது என்பதை எமக்கு உணர்த்தும். முதலாவதாக நாம் 'எல்லாவற்றையும்' அறிவது இயலாது அல்லது அறிவதில்லை. இரண்டாவதாக, ஒருவேளை அது சாத்தியமானாலுங்கூட, வாழ்வின் மறைபொருள், இரகசியம், அப்படியான ஒரு கணிப்பீட்டுக்குள் அடங்குவதும் அல்ல.

அப்படியானால் நாம் வாழ்வை எப்படியாகக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகித்துக் கொள்கிறோம்? காரியங்களைப் புரிந்துகொள்ளும்படிக்கு நாம் அனைவருமே எமக்கென உலகநோக்குகளை வகுத்துக்கொள்வதுண்டு. அந்தப் புரிந்தறிவிற்குள் பலர் தமது வாழ்வை மேற்பார்வை செய்யும் ஒரு கடவுள் உள்ளதாகக் கருதி அந்தப் புரிந்தறிவின்படித் தமது வாழ்வினை நிர்வகித்துக் கொள்வதுண்டு. ஆனால் வாழ்வின் 'தரவுகள்' தேவனைப்பற்றியும் உலகநோக்கைப்பற்றிய அவர்களது கருதுகோளையும் ஆதரிக்காத தரவுகளாய் அமையும் பட்சத்திலே என்ன நடக்கும்?



இப்படியான பிரச்சினைகளுக்குப் பலர் முகங்கொடுக்கும் ஒரு துறைதான் வேதனை என்பது. மனிதகுலத்தைப்போலவே வேதனையும் தொன்மையானது. மனிதன் பாவத்திலே வீழ்ந்ததுமே அங்கே மனித வாழ்வின் தவிர்க்கமுடியாத பங்காக வேதனையும் வருவதை நாம் வாசிக்கிறோம். வேதனை, வெட்கம், விரக்தி, வெறுப்பு, எதிர்ப்பு, வன்முறை, தனிமைப்படுதல் மரணம் போன்றவைகள் அனைத்துமே மனித சூழ்நிலையின் இன்றியமையாத பங்குகளாயின. பல மார்க்கங்கள் இத்தகைய தீமை மற்றும் வேதனை ஆகியவற்றைக் கையாள்வதற்கு முயற்சிக்கின்றன.

இந்தப்பிரச்சினையை கிறிஸ்தவ விசுவாசமும் பரிசிலீத்து அதற்கென தனித்துவமான ஒரு தீர்வையும் கொண்டுள்ளது. சர்வ வல்லமையும் அன்பும் உள்ள தேவன் ஏன் மக்களை வேதனையுற அனுமதிக்கிறார்? இது மெய்யான, விடயபூர்வமான கேள்வி. குறிப்பாக அப்பாவிப் பொதுமக்கள் வேதனைக்கு உட்படும்போது இந்தக் கேள்வி சாலப்பொருத்தமான கேள்வியாக அமைவதுண்டு. பிள்ளைப் பராயத்திலே புற்றுநோயாலும் பல்வேறு கொடிய நோய்களாலும் மரிக்கும் பிள்ளைகளின் வேதனைபற்றிப் பொருத்தமான அல்லது திருப்திதரக்கூடிய பதிலை யாரால் கொடுக்கமுடியும்? "குரலிழந்தவைகளைப் பெயரிடுதல்" **(Naming the Silences)** எனும் தனது நூலிலே ஸ்ரான்லி ஹவர்வாஸ் என்பவர் எழுப்புவதைப்போலப் பல எழுத்தாளர்கள் எழுப்பும் கேள்விகள் அப்படியானவைகளே. அப்படியான சூழ்நிலைகளுக்கு நாம் முகங்கொடுக்க நேரும்போது, மனிதனால் உருவாக்கப்பட்ட விளக்கங்களை அலப்புவதை விடுத்து தேவன் ஏதாவது கூறுவாரா என்று நாம் பேசாதிருப்பதே மேல்.



வைத்தியரிடம் ஊசிபோடக் கொண்டுவரப்படும் குழந்தையைக் கற்பனை பண்ணிப்பாருங்கள். அந்த வைத்தியசாலையின் சூழ்நிலை மற்றும் வைத்தியர் ஆகியவற்றைப்பற்றி அந்தக் குழந்தை பல்வேறு கேள்விக்குறிகளுடன் பார்த்தாலுங்கூட, அது தன்னைத் தூக்கி வைத்திருக்கும் தாயின் முகத்தைப் பார்க்கும்போது மிகுந்த நம்பிக்கையுடன் பார்க்கும். அது நம்புகிற முகம் அல்லவா அது. தீடீரென ஊசி ஏற்றப்படும் வலி தெரியவந்ததும் பிள்ளை வீலிட்டு அலறும். அதன் முகம் ஆயிரம் கேள்விகளுடன் தாயைப் பார்க்கும். "இதை ஏன் எனக்கு நடக்க அனுமதித்தாய்? நான் உன்னை நம்பினேனே?" என்று அந்தப்பார்வை ஆதங்கத்துடனும் ஆக்ரோஷத்துடனும் கேட்கும். அந்தக் குழந்தையின் கேள்விப்பார்வைகளுக்கு விளக்கங்கள் கொடுக்கத் தாயால் இயலாது. அவள் செய்வதெல்லாம் ஒன்றேயொன்றுதான். அலறும் அந்தக் குழந்தையைத் தனது மார்போடு இறுக அணைத்துத் தன்கண்களிலும் கண்ணீர் சொரிவதுதான். அதேபோலவே நாம் வேதனைப்படும் பல சூழ்நிலைகளிலும் தேவனும் இருப்பதில்லையா? வேதனையைப் பற்றிக் கலந்துரையாடுவது எளிது. ஆனால் நாம் மெய்யாக வேதனைக்கூடாகப் போகும் போது அது ஒரு கடினமான அனுபவமாக அமைவதுண்டு.

எமது வேதனையினதும் கேள்விகளினதும் மயான அமைதியிலே எந்த ஒரு தர்க்கரீதியான பதிலையும் நாம் செவிமடுப்பதில்லை (குறைந்த பட்சம் எமது தர்க்கத்திலாவது அவை ஏறுவதில்லை), ஆனாலும் எம்மால் தேவனின் அன்பான பிரசன்னத்தை மாத்திரம் உணரக்கூடுமாய் இருக்கும். வேதனையின்போது நாம் பதில்களையோ அல்லது அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தங்களையோ கண்டுகொள்வது அநேகமாகக் கடினமானதாய் இருந்தாலுங்கூட, நாம் எப்போதுமே தேவனுடைய பிரசன்னைத்தை உணர்ந்துகொள்ளலாம். மனிதர்களினதும் சகல சிருஷ்டிகளினும் வேதனைப் பெருமூச்சுகளைப் பற்றி அதாவது முனகல்களைப் பற்றி வேதம் உரைக்கிறது (ரோமர் 8: 22–23). இந்தத் தகவல் எமக்குப் புதிய தகவலே அல்ல. வேதம் கூறாவிட்டாலும் அது எமக்குத் தெரியும். ஆனால் அங்கே உள்ள அபூர்விந்தையாக எமக்குத் தோன்றும் இன்னுமொரு காரியந்தான், தேவனும் எம்முடன்கூட பெருமூச்சுவிடுவது, முனகுவது (ரோமர் 8:26)! எமது உணர்வுகளை அறியாமல் ஏதோ தூரத்திலே இருப்பவர் அல்ல தேவன். அவர் எமது வேதனைகளிலே பங்கெடுக்கிறார். வேதனைப் பங்கெடுப்பிலே எமது சகபாடி அவர். சிலுவையை நாம் பார்க்கும்போது இதனை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

எனவே, வேதனையின்போது தேவன் வழங்குவது அவரது உடனடிப்பதில் அல்ல, மாறாக அவரது தோழமை. தமது தலைவரின் விகாரச் சிலுவை மரணத்தைகண்டபின்பு எம்மாவூஸ் பட்டணத்துக்கு நடந்து சென்றுகொண்டிருந்த அந்த இரண்டு சீடர்களும் பெருந்துயர் கொண்டிருந்தார்கள். அவர்களது முகநாடி விழுந்து, அவர்களது நம்பிக்கை சிதறடிக்கப்பட்ட நிலைமையிலே அவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அவர்களைப் பொறுத்தவரைக்கும் எதிர்காலம் சூனியமாக, அர்த்தமற்றதாகவே இருந்திருக்கும் (லூக்கா 24:13–14). இயேசுவும் அவர்களுடன் இணைந்து நடந்து அவர்களின் பரலோகத் தோழராக இருந்தார். அவர்களுக்கு அவர் வேதாகமத்தைத் திறந்து விளக்கி, அவர்களுடன் அவர் உணவு உண்ண அமர்ந்தார். பின்புதான் அவர்களுக்கு விளங்கியது. 'அவர் வேதத்தை அவர்களுக்கு விளக்கி அவர்களுடன் பேசியபோது அவர்களது இருதயம் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்த உணர்வு நினைவுக்கு வந்தது (லூக்கா 24:32). மனமொடிந்து கைவிடப்பட்ட நிலைமையிலே இருந்த அந்த சீடர்கள் இயேசு யார் என்பதை இனங்கண்டுகொண்டதுதான் தாமதம், மெய்யான தேவ பிரசன்னக் களிப்பு அவர்களை ஆட்கொண்டது (லூக்கா 24: 31, 35).

பின்பு இயேசு ஏனைய சீடர்களுடனும் பேசி "வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறந்தார்" (லூக்கா 24:45). இருதயம் இயேசுவை இனங்கண்டுகொள்ள மனம் அவரைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறது. என்னே ஒரு உன்னதமான சத்தியம் இது! குறிப்பாக நாம் வேதனைகளுடாகச் சென்று எமது எதிர்பார்ப்புக்களை மீறித் தவறாகப் போய்விட்ட காரியங்களையிட்டு மனங்குழம்பிய நிலைமையிலே இருக்கும்போது, இந்தப் பேருண்மை என்னே உன்னதமானதாய் இருக்கிறது.

பல மக்கள் தமது அனுதின வாழ்விலே பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்த நிலையிலே வேதனையை எப்படியாக நாம் வரையறுப்பது? வேதனையிலே ஏதாவது அர்த்தமோ அல்லது கனமோ அல்லது நோக்கமோ உள்ளதா? இயற்கை அனர்த்தங்களால் ஏற்படுத்தப்படும் வேதனைகளை நாம் எப்படி விளக்குவது? துன்ப அலைகளால் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வேதனைப் படுபவர்களுக்கு ஏதாவது நம்பிக்கை உள்ளதா? இந்த அனைத்துக் கேள்விகளுக்கும் நாம் தேவனை மாத்திரந்தான் பார்க்கவேண்டும். அவை பற்றிய அர்த்தத்தை அவரே எமக்கு உணர்த்துபவர் – இப்போது உணர்த்தாவிட்டால் இறுதி நாளிலே நிச்சயம் உணர்த்துவார்.



வேதனைச் சம்பவச் சூழ்நிலைகளையிட்ட அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ளாவிட்டாலுங்கூட, எம்முடன் அந்தச் சந்தர்ப்பங்களிலே நடப்பவரின் பிரசன்னத்தை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அவரது பிரசன்னத்தை நாம் உணர்ந்து கொண்டோமேயானால், சிலவேளைகளிலே எமது சூழ்நிலைகளையிட்ட அர்த்தத்தை எம்மால் புரிந்துகொள்வதும் கூடுமானதாய் இருக்கும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு வராவிடாலுங்கூட, ஒரு காலத்திலே நாம் அதனைக் காண்போம் என்று அவரிலே நாம் நம்பலாம். நாம் இந்தப் பக்கத்திலே காண்பதெல்லாம் திரையிழை ஓவியத்தின் (tapestry) இழை முடிச்சுக்களும் பல்வேறு இழைகளின் அலங்கோலங்களுமே. அந்த அலங்கோல வடிவங்களிலே எவ்வித அர்த்தமும் தெரிவதில்லை. எமது வாழ்விலே தேவன் திறமையுடனும், அன்புடனும் இழைத்தமைத்துள்ள ஓவியம் அதன் மறுபக்கத்தைப் பார்த்தாற்தான் புரியும். வேதம் எமக்கு "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28) என்று கூறவில்லையா?

பெரும் துன்பவேதனையூடாகச் சென்ற அநேகர் வேதாமத்தை நல்லதோர் உதவியாகக் கண்டுகொண்டுள்ளனர். எமது வேதனை விளக்கமுடியாததாக இருந்தாலுங்கூட வேதாகமம் உடனடியானதும் நேரடியானதுமான பதிலை வழங்குவதில்லை, ஆனால், எமது வாழ்வை இருத்திவைக்கும் தேவனுடைய உதவி பற்றிய சம்பவக்கதைகளை எமக்கு வழங்குகிறது.

நாம் வேதாகம உலகநோக்கினால் நிரப்பப்பட்டிருப்போமேயானால் எமது வேதனையான கேள்விகளுக்கும் அவசரமான அங்கலாய்ப்புகளுக்கும் நாம் நேரடியான பதிலைக் கண்டுகொள்ளாவிட்டாலுங்கூட, நாம் அதிலே ஆறுதலைக் கண்டுகொள்ளக் கூடும். தேவனுடைய வார்த்தையானது மருந்தாயும் ஊசியாயும் தொழிற்பட வல்லது. தனிப்பட்ட வேதனையூடாகவும் ஐயத்தினூடாகவும் செல்வோருக்கு அது மருந்தாகத் தொழிற்படும். தற்போதைய காலகட்டத்திலே பிரச்சினையற்றதாக இருந்து எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு அது எம்மை நன்கு கற்பித்து, எம்மை ஆயத்தப்படுத்தும்படிக்குத் தடுப்பூசியாகவும் அது தொழிற்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, எம்மைக் கைவிட்டுவிடாத, எம்மை விட்டு அகலாத தேவனை நாம் கண்டுகொள்வோம்.

## சிந்தைப் பிரதிபலிப்புக்கு

1. உலகில் உள்ள தீமை மற்றும் வேதனையின் பிரசன்னம் பற்றி வேதம் எப்படியாக விளக்குகிறது? நாம் வேதனையுறும்போது தேவன் தமது பிரசன்னத்தை எப்படியாக எமக்கு அருளுவார்?
2. ரோமர் 8:28 இனை நீங்கள் எப்படியாக விளங்கிக்கொள்கிறீர்கள்? தேவன் சகல காரியத்தையும் எப்படியாக நன்மைக்காகப் பயன்படுத்துவார்? இந்த வாக்குத்தத்தம் நிபந்தனைக்கு உட்பட்டதா?
3. எமது வாழ்விலே எற்படும் வேதனையயிட்டு தேவனுடைய வார்த்தையானது எப்படியாக மருந்தாகவும் ஊசியாகவும் தொழிற்படும்? இவ்விடயத்திலே உங்களது சொந்த அனுபவத்தைக் கருத்திற் கொண்டு ஆராயவும்.

# எமது கண்கள் இயேசுவின்மீது


ஒருசில காலங்கள் எமது சபைக்கும் தனிப்பட்ட விதத்திலே எனக்கும் மிகவும் கடினமான காலங்களாக இருந்துள்ளது. பேராயரின் சம்பளம் பற்றி அநாமதேயக் கடிதங்கள் சுற்றுநிருபங்களாக வலம் வந்தன. மெதடிஸ்த சபைக்கும் அதன் தலைமைக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்தவண்ணம் இருந்தன. பத்திரிகைக் கட்டுரைகளும் அதனை விட்டுவைக்கவில்லை.

இதன் விளைவாக, தொண்டுப்பணித்துறையின் ஆணையாளர் இதுபற்றி மெதடிஸ்த சபையிடம் விசாரணை நடாத்தினார். அவர்களது சகல கேள்விகளுக்கும் நாம் பதில் வழங்கி, தேவையான ஆவணங்கள் அனைத்தையுமே வழக்கினோம். எமது பதிவுகளையும் பதில்களையும் ஆராய்ந்து பார்த்த ஆணையாளர் இறுதியிலே விடுத்த அறிவிப்பு பத்திரிகைகளிலே பிரசுரிக்கப்பட்டது. சபையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் தலைவர்களும் அவர்கள்மீது அபாண்டமாகச் சுமத்தப்பெற்ற சகல குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டு இந்த விடயமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமைக்காக நாம் தேவனுக்குத் துதி செலுத்துவதுடன் அது எமக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது.



இடுக்கண்கள் எம்மைக் கூர்மையாக்க உதவுகின்றன. தேவன் நமக்கு வைத்துள்ள பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு நாம் அவ்வேளைகளிலே தரித்து நிற்கிறோம். எதேச்சையாக விடுபட்ட நிர்வாகக் குறைபாடுகளை இனங்கண்டு நாம் வேதனையுற்றோம். ஆயினும் விடயம் முற்றும் முழுவதுமாக அரச அதிகாரிகளால் ஆராயப்பட்டு விசாரிக்கப்பட்டு தெளிவு ஏற்பட்டமைக்காக நாம் ஆண்டவருக்கு நன்றி கூறுகிறோம். எமது சபை பரிபூரணமானதல்ல. நாம் நிர்வகிப்பிலும் சேவிப்பிலும் மேம்படுவதற்கு எப்போதுமே விருப்பங்கொண்டவர்கள். பேராயர் என்ற ரீதியிலே அப்படியான மேம்பாடுகள் ஏற்படுவதற்கு நான் எனது பங்களிப்பைச் செய்வேன். சபையிலும் சமூகத்திலும் செய்யும்படித் தேவன் எமக்குத் தகவூட்டிய நற்பணிகளை நாம் தொடர்ந்தும் செய்து, கிறிஸ்துவின் ஒன்றுபட்ட சரீரமாக முன்நகர்வோம்.


நாம் தொடர்ந்தும் சபைத் தலைமைகளுக்கும் அங்கத்தவர்களுக்குமாக ஜெபிப்போம். தனது சபையை ஸ்தாபித்தவர் தேவனே. பாதாளத்தின் கதவுகள் அதற்கு எதிராக நிலைநிற்பதில்லை (மத். 16:18). சபைக்காகவும் எனக்காகவும் ஜெபித்த பலருக்கு நான் நன்றி கூறுகிறேன். தேவன் தொடர்ந்தும் தனது சபையைப் பாதுகாத்து, வழிநடாத்துவாராக. விசுவாசத்திலும், தாழ்மையிலும், ஒன்றிப்பிலும், பரிவிரக்கத்திலும் நாம் ஒன்றாகக் கர்த்தரைச் சேவித்து, அவரது நாம மகிமைக்காகப் பணியாற்றுவோம்.

நான் இதனை எழுதுவது இந்தக் கடினமான காலப்பகுதிக்குள்ளாகக் கடந்து சென்ற எனது சொந்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுவதற்கும், தமது சொந்த கடினமான சூழ்நிலைகளுக்கூடாகச் செல்வோரை ஊக்குவிக்கும்படிக்குமே.

எதிர்பாராத புயலுக்கு நாம் முகங்கொடுக்க நேரிடும்போது எமது முதற்கேள்வி, "ஏன் ஆண்டவரே" என்பதுதான். "ஏன் இது", "கர்த்தாவே நீர் எங்கே?" போன்றகேள்விகள் அடுக்கடுக்காக எழும். அநேகமாகத் தேவன் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவரது பாணியிலே பதில் தந்து, எமக்கு அவர் இன்னமும் உள்ளவராகத் தம்மைக் காண்பிப்பார்.

இப்படியான சூழ்நிலையிலே, எமது ஆன்மீக ஒழுங்குறைகளூடாகத் தேவன் எம்மைத் தாங்குவதை நான் அநேகமாகக் கண்டிருக்கிறேன். எமது கடினமான வேளைகளிலெல்லாம் தேவனுடைய வார்த்தையானது விசேஷித்த ஒரு கிருமை வழிமுறையாகி, தேவன் எம்முடன் தெளிவாகப் பேசுவதற்கு இட்டுச்செல்லும். சங்கீதங்கள் எனக்கு விசேஷித்த ஊக்கமாயும் அடைக்கலமாயும் எனக்கு இருந்தது. துன்பசோதனை வேளைகளிலே சங்கீதங்களை எனக்கு உதவியாகக் கண்டிருக்கிறேன்; குறிப்பாகக் கடநதுசென்ற அந்த காலகட்டத்தின்போது அவை குறிப்பாக நிஜமானவையாக இருந்தன. அவைகளிலே தேவனுடைய வார்த்தை செழிப்பாக வழங்கப்பட்டுள்ளன. வேதாகமத்தின் இதர பாகங்களுங்கூட உயிர் பெற்றுத் தேவனுடைய பிரசன்னத்தையும் அவரது செய்கைகளையும் எனக்குக் கூறியது. தேவனுடைய வார்த்தையின் அநேகமான பகுதிகள் நேரடியாக என்னுடன் பேசியமையால், குறிப்பாகத் தெளிவான பகுதிகள் பற்றிய ஒரு பட்டியலை நான் தயாரித்தேன். அவற்றுள் அநேகமானவை எனக்குத் தனிப்பட்டவைகளாகும்.


சிலவேளைகளிலே எமது துன்பங்களிலே தேவன் அமைதியாக இருப்பதுபோலத் தோன்றும். ஆயினுங்கூட, தேவன் அந்த வேளைகளலுங்கூட எம்முடன் இடைப்பட்டு, எமக்குத் திடவுறுதி வழங்கி, வலுவூட்டிச் சவாலிட்டு எம்முள் செயற்படுகிறார். வேதாமகத்துக்கு அடுத்தபடியாக, அவர் ஜெபத்தினூடாக எம்மைத் தாங்குகிறார். நாம் இடுக்கண்களைச் சந்திக்க நேரும்போதுதான் அதிகம் ஜெபிப்பது விநோதமானதே! தேவன் அநேகமாகப் பிரச்சினைகளை அனுமதிப்பது எம்மைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடன் நெருக்கி இழுத்துக்கொள்ளவும், அவருக்கான எமது அன்பை ஆளமாக்கவும், அவருக்கான எமது அர்ப்பணிப்பை வலுவூட்டுவதற்குமே. துன்பங்களின்போது நாம் அதிகம் ஜெபிப்போம், அதிக ஊக்கத்துடன் ஜெபிப்போம், தேவனை அதிகம் நம்புவோம், இவைகளூடாக எமது ஜெபத்தின் தராதரம் மாறுதலுக்கு உள்ளாகி மேம்படும். மிக மோசமான சூழ்நிலைகளின்போது பவுல் ஒரு அபூர்வ மறைபொருளையிட்டு எழுதுகிறார். "நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறத்ற்கும், அவரது மரணத்துக்கு ஒப்பான மரணத்துக்கு உள்ளாகி.." (பிலிப். 3:10). துன்பவேதனையானது தேவனைப்பற்றிய தனிப்பட்ட அறிவைத் தன்னிலே ஆழமாக்கியதைப் பவுல் அறிந்திருந்தார். துன்பவேதனையானது ஏதோ ஒரு விதத்திலே கர்த்தருடனான எமக்கு ஐக்கியத்தை இனிக்கச்செய்கிறது; இதை நான் உண்மையானதாகக் கண்டுள்ளேன்.



முகங்கொடுத்திருக்கலாம். ஆனால் எம்மை நேசித்து, தனது கிருபையினால் எம்மைத்தாங்கி வரும் தேவன் ஒரே தேவன்தான். எம்மைப் பரிசுத்தராக்கிக் கிறிஸ்துவைப் போலாக்கி, எம்மைத் தாழ்மையாக்கி, எம்மை வலுவூட்டும் அவரது மேன்மையான நோக்கத்தை எமது வாழ்வுகளிலே அவர் செயற்படுத்தி வருகிறார். புயல்களூடே செலுத்த அவர் எம்மை அனுமதிக்கிறார். அவர் நாம் படும் வேதனைகளைக் கண்டு களிகூர விரும்பியவாரக அல்ல, மாறாக எமது விசுவாசத்தைப் பரீட்சிக்கும்படிக்கே அவர் அவற்றை அனுமதிக்கிறார். எமது வாழ்க்கைப்படகு அடிபட்டு, உடைவு எடுத்து அதன் எல்லைமட்டுக்குங்கூட சோதிக்கப்படலாம்; எமது பாய்மரங்கள் சில இடங்களிலே கிழிந்தும் போகலாம். ஆனாலும் அத்தகைய துன்பப்புயல்களூடாகத் தேவன் நம்முடன் இருப்பதால், அதனூடாக நாம் வலிமைபெற்றவர்களாக, எமது விசுவாசத்திலே பெலப்பட்டவர்களாக, தனியச் சோதிக்கப்பட்டாலும் பாதுகாப்பாகவும், தொடர்ந்தும் நிலைகொள்பவர்களாகவும் மிளிர்வோம்.

மேலும் வேதனையான காலகட்டங்களிலேதான் சபையும் தேவனுடைய சமூகம் என்ற ரீதியிலே அதன் அதிசிறந்த தன்மையை வெளிப்படுத்திடவும் முடியும். மக்களின் ஜெபத்தினாலும், மெதடிஸ்தர்கள் மற்றும் இதர கிறிஸ்தவ சமூகத்தினர்கள் ஆகியோரின் ஊக்கங்களாலும் நான் தனிப்படத் தொடப்பட்டேன். பலர் ஜெபித்தார்கள்; ஒருசிலர் அவரது சபைமீது தேவனின் கிருபையும் இரக்கமும் இருக்கும்படியாக உபவாசித்தும் ஜெபித்தார்கள். பொதுவாக வெளித்தெரியாத, 'சாதாரண' மெதடிஸ்தர்கள், அந்தக்காலகட்டங்களிலே தமது சொந்த விசுவாசத் தியான வாழ்வில் இருந்து பகிர்ந்துகொண்ட உற்சாகமூட்டும் வார்த்தைகளால், அவர்கள் எத்தகைய துடிப்பான கிறிஸ்தவ வாழ்வை வாழ்கின்றனர் என்பது எனக்குக் காண்பிக்கப்பட்டது.

எமது வாழ்விலே நாம் பல்வேறு வகைப்பட்ட தனிப்பட்ட துன்பங்களுக்கு

எனது படிப்பு வேதாகமத்திலே நான் எனக்கு உதவியாக அங்கே குறிப்பிடப்பட்ட விளக்கத்தைக் கண்டேன் – அதாவது, துன்பவேதனைகள் எம்மை மேல்நோக்கியும் முன்நோக்கியும் நகர்த்திட உதவும் என்பது. இதனை மேலும் ஆளமாக விளங்கிக் கொள்ளும்படிக்கு ஒரு வேதப்பகுதியையும் நான் கண்டுகொண்டேன். "உன் தேவனாய் இருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" (ஏசாயா 41:13). இந்த வசனத்தை வாசித்தபின்பு, இதனை எனது வாழ்விலே நான் ஜெபித்து, தேவனுக்கு நன்றிகூருகையிலே, எனது வலது கரத்தைத் தனது வலக்கரத்தால் பிடித்துக்கொண்டமைக்காக நான் அவருக்கு நன்றி கூறினேன். அதாவது தேவன் என்னை வழிநடாத்தும்போது, எதிர்காலத்துக்குள் என்னுடனே நடக்கிறார் என்பதே இந்தக் காரியம். அப்போது ஒரு விசித்திரமான படம் எனக்குள் வந்தது. பொதுவாக அருகிலே நடாத்தும் தந்தையர் தமது இடக்கரத்தாலேயே எமது வலக் கரத்தைப் பிடிப்பதுண்டு. அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலக்கரத்தால் எனது வலக்கரத்தைப் பிடித்து நடாத்துவதென்றால், அது நான் அவரது முகத்தைப் பார்க்காமல் அது சாத்தியப்படாது. கடந்த காலத்தினூடாக நான் அவரைக் கடந்தே பார்க்கவேண்டும். அதன்பின்பு எதிர்காலத்தை அவர் பார்க்கிறார் என்ற நம்பிக்கையிலேயே நான் நடக்கவேண்டுமானால், நான் அவரைப் பார்த்து நடக்கவேண்டுமானால், அவர் முன்புறமாக நடக்க நான் பின்புறமாககவே நடந்தாகவேண்டும். அவரை நான் நெருங்கிப் பார்க்கையிலே அவரது கண்களிலே அவர் காணும் எதிர்காலம் பிரதிபலிப்பதை நான் காணலாம். அப்படிச் செய்தால் மாத்திரந்தான் நான் வழிநடாத்தப்படுவேன்.



இதனை எபிரேயர் நிருபத்தின் எழுத்தாளர் நிச்சயமாகவே அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் எழுதும்போது, "...விசுவாசத்தைத் தொடக்கிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்க ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.." (எபி. 12:1–2) என்கிறார். இயேமீது கண்களை வைத்தவர்களாக நாம் எப்படியாக ஓட்டப்பந்தயத்திலே ஓடுவது? அது அந்த எழுத்தாளர் விளக்குவதைப்போல சிலுவையின் வழியிலேதான் கூடும். சிலவேளைகளிலே நாம் அப்படியான பாடங்களைப் புயல்களின்போதுதான் திறம்படக் கற்றுக்கொள்கிறோம்.

## சிந்தைப்பிரதிபலிப்புக்கு:

1. நாம் துன்புறுகையிலே எப்படியாக ஜெபிப்பதுண்டு? என்ன விதங்களிலே துன்ப வேதனை எம்மைத் தேவனிடம் அண்டிச் சேர்க்கிறதாய் இருக்கிறது?

2. துன்புறுதல் எப்படியாக எமக்கு மேல்நோக்கவும் முன்னோக்கவும் உதவிசெய்கிறது? உங்களது சொந்த அனுபவங்களை மீட்டிப்பார்த்தால், இதனை விளக்கிட உங்களுக்கு உதவியாக இருக்கும்.

3. கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துன்புறுதல் எப்படி உதவிசெய்யலாம்? இயேசுமீது எமது கண்களை வைக்க நாம் எப்படிக் கற்றுக்கொள்கிறோம்? (எபி. 12:1–2). நாளாந்த வாழ்விலே அதன் அர்த்தம் என்ன?

---

*பக்கம் 34 இன் தொடர்ச்சி*

- எந்த சூழ்நிலையிலும் உறுதியாய் நிற்கும் திடமனது
- இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதில் காட்டிய வைராக்கியமும், அவசரமும்
- நித்திரையிலும் ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கின்ற ஓய்வற்ற ஊழியம்
- மனிதரையல்ல, தேவனை மாத்திரமே பிரியப்படுத்திய குணாதிசயம்
- தனக்கென்று எதுவித புகழையோ பிரபல்யத்தையோ நாடித் தோடாத தாழ்மை
- ஆத்துமாக்கள்பேரில் காட்டிய வைராக்கிய வாஞ்சை
- இழப்புகளிலும் எழுந்து நின்ற கெம்பீரம்
- எளியவனையும் அன்போடு அரவணைக்கும் கைகள்
- இரட்சிப்பின் செய்தியைச் சுமந்து சென்ற அழகான பாதங்கள்
- இறுதிவரை பேனா பிடித்து தெளிவாக எழுதிய கரங்கள்
- தன்னை இரட்சித்தவருக்காக அயராது உழைத்த பண்பு

அதிகம் படிப்பறிவோ, பட்டப்படிப்போ இல்லாபோதும், அநேகர் தேவாதி தேவனை அறிகின்ற அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி, தேவனுடனான உறவில் வழிநடத்தப்படும்படி இந்த சாதாரண தாயை தேவன் அசாதாரணமாகப் பாவித்தாரே. "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையம் தேவன் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:27,28) இந்த வசனங்கள் அம்மாவின் பணியால் நிறைவேறியதற்கு நாம் அநேகர் சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தியாக அன்பு

## உரைமூலம்: மயூக்க பெரேரா

### கட்டுவரைவடிவமும் தமிழாக்கமும்: ஆசிரியர்

அன்புக்கும் கிறிஸ்தவத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தேவன் அன்பாக இருக்கிறார். தேவனுடனான எமது உறவின் அடிநாதமே அன்புதான். அன்பைப்பற்றிய பல செய்திகளை நாம் கேள்விப்பட்டும் இருப்போம். ஆயினும் அன்புக்கு எல்லை என்பதே இல்லை. அன்பு புளித்துப்போகும் நிலையை என்றுமே அடையாது. அன்பைப்பற்றி வேதாகமத்திலே பல்வேறு பகுதிகள் உண்டு. தேவனுக்கும் எமக்குமான அன்பு – அதாவது அவசியமான அன்பு, எமக்கும் எம் சகோதர சகோதரிகளுக்குமான அன்பு – அதாவது நெருக்கமான அன்பு, எமக்கும் பிறருக்குமான அன்பு – அதாவது இயல்பான அன்பு, சுற்றாடலுக்கும் எமக்குமான அன்பு – அதாவது தீர்மான அன்பு என்றெல்லாம் பலவாறாக அன்புறவுகள் வகைப்படுத்தப்படுவதுண்டு. இவற்றுள் விசுவாசக் குடும்பத்தாரிடையே அதாவது எமது 'சகோதர சகோதரிகளுடனான எமது அன்பு என்பதையே இங்கு மீட்டிப்பார்ப்போம்.

இதற்கு ஆதாரமாக, 1 யோவான் 3:16–18 பகுதியை நாம் பார்ப்போம். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாய் இருந்து தன் சகோதரனுக்கு குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்வது எப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்"




### தியாக அன்பு என்றால் என்ன?

தேவனுடைய அன்பை எம்மில் பலர் அனுபவித்திருக்கிறோம், அதன் நன்மையை நாம் பெற்றிருக்கிறோம். அவரது குமாரனை எமக்காக அனுப்பி எமக்காக அவரது ஜீவனைக் கொடுத்த அன்பு அது. எமக்குப் பாவத்திலிருந்து மன்னிப்பை அருளி, எமக்கு இரட்சிப்பாகவும் அமைந்தது. ஒருவேளை நாம் எமது பெற்றோர், நண்பர்கள், சகோதர சகோதரிகள், அயலவர்கள் போன்றோருடனான அன்புறவுகளிலே அன்பின் முழுமையை அனுபவித்திராவிட்டாலுங்கூட, அன்பு இன்னதென்பதை நாம் அனைவருமே இயேசுவிடமிருந்து அறிந்து அனுபவித்து, நாம் அனைவருமுமே அதற்குச் சாட்சிகளாயும் இருக்கிறோம். எனவே, நாமும், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறலாம்.

ஆனால் அதே வசனத்தின் இரண்டாவது பகுதி, "நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்." என்கிறது. அதாவது, நாம் தேவனின் அன்பைப் பெற்று அனுபவித்ததால், அதேபோன்ற தியாக அன்பினால், நாமும் எம் சகோதரசகோதரிகளுக்காக எமது ஜீவனைக் கொடுக்க நாம் கடனாளிகள் என்று இந்த வசனம் கூறுகிறது. எத்தனைபேர் சந்தர்ப்பம் கிடைத்தால் உங்கள் சகோதர சகோதரிகளுக்காக மரிப்பீர்கள் என்று கேட்டால், அதற்குச் சந்தர்ப்பம் வராது எனக் கருதி, துணிந்து 'ஆம்' என்று கூறக்கூடும், அல்லது 'ஆம்' என்று உரைப்பதுதான் நாம் கொடுக்கவேண்டிய சரியான பதில் என்ற ரீதியிலே அப்படிக் கூறக்கூடும். இது இலகுவான பதில். இந்த வசனம் அதற்காகவா கூறப்பட்டுள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன் நம்மீது கொண்ட அன்பு, ஜீவனைக் கொடுத்த நிகழ்வினால் மாத்திரம் நிகழ்ந்ததல்ல. இயேசு எமக்காகப் பரலோகை விட்டு இந்தப் பாருலகுக்கு மனுவுருவானதே எம்மீது அவர் கொண்ட தியாக அன்பினாலேதான். அவரது பணி முழவதும், போதனைகள் அனைத்தும், ஏன் அவரது வாழ்வும் எல்லாமே மக்கள்மீது அவர் கொண்டிருந்த அன்பின் நிமித்தமே. இவை அனைத்திலுமே அவர் பல தியாகங்களைச் செய்துள்ளதைக் காணலாம். எனவே நாம் அவரைப்போல எமது சகோதர சகோதரிகளையும நேசிப்பது என்பது அவர்களுக்காக ஜீவனைக் கொடுக்கும் நிகழ்ச்சியாக மட்டும் வரையறுக்கப்படாமல், எமது வாழ்விலே அவர்களைத் தியாக அன்பிலே நேசிக்கும், சேவிக்கும் ஒரு வாழ்க்கை முறையேயாகும்.

அப்படி அவர்களை நாம் எப்படிச் சேவிக்கலாம், நேசிக்கலாம் என்பதே அடுத்த கேள்வி. இதனையே அடுத்த வசனம் நமக்கு ஒரு உதாரணத்தின் மூலமாகக் கற்பிக்கிறது.


## தியாக அன்பு கொள்வது எப்படி?

"ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாய் இருந்து தன் சகோதரனுக்கு குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்வது எப்படி?" இந்த வசனத்தை விளக்கும்படிக்கு அடுத்த வசனத்திலே "வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம்" என்கிறார். இதையே யாக்கோபும் எதிரொலிக்கிறதைப் பார்க்கலாம். "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரம் இல்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்துக்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால், பிரயோஜனமென்ன" (யாக். 2:15-16). இவற்றிலிருந்து தியாக அன்பு என்பது பேச்சல்ல, செயல் என்பது தெளிவாகிறது. அன்பு கொவ்வது என்பது செயற்பாடே. இதனையே 1 யோவான் 3:17 கூறுகிறது. இந்தக் கூற்றை நாம் ஆராய்ந்தால் அங்கே, அனபு கூரும் செயற்பாட்டுக்கு அடிப்படையாக மூன்று வினைச்சொற்கள் உள்ளன. அவையாவன, கொண்டிருந்தல், காணுதல், கொடுத்தல் (கொடாதிருத்தல்). இந்த மூன்றையும் நாம் விரிவாக ஆராய்வோம்.

## கொண்டிருத்தல்

அதாவது ஆஸ்தி உடையவனாய் இருந்தல். தம்மிடம் ஆஸ்தி இல்லை என்று பலர் எண்ணுவதுண்டு. எனவே அவர்கள் தாம் கொடுப்பதில்லை என்பதற்கு அதனை ஒரு சாட்டுப்போக்காக்குவதுமும் உண்டு. எமது உழைப்பிலே நாம் எதிர்காலத் தேவைக்காக சேமித்ததை எப்படிக் கொடுப்பது என்றும் சிலர் எண்ணலாம். நாம் எமக்கெனச் சேமிப்பது பாவமா என்றும் பலர் கேட்கலாம். இதையெல்லாம் பார்க்கும்போது, ஆஸ்தி என்பதையிட்ட எமது எண்ணப்போக்கானது, அது எவ்வளவு என்பதைக் கொண்டே வரையறுக்கப்படுவதைக் காணலாம்.

ஆனால் உண்மையிலேயே ஆஸ்தி என்பது எம்மிடம் எவ்வளவு உள்ளது என்பதையிட்ட அளவு அல்ல. விதவை கொடுத்தது இரண்டே காசுதான் இயேசுவின் பார்வையிலே



அவளே அதிகூடியதைக் கொடுத்தவள். அதாவது, அவள்தான் கொடுக்கும் ஆஸ்தியைக் கொண்டிருந்தவள்! இதிலிருந்து தெரிவது என்னவென்றால், ஆஸ்தி உள்ள அளவல்ல, கொடுக்கும் அல்லது பகிரும் மனப்பான்மையின் அளவே. உலகரிதியாக, பண அளவின்படி செல்வந்தராய் உள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறும் அறிவுரை என்ற தெரியுமா? "இவ் உலகத்திலே ஐசுவரியம் உள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை உள்ளவர்களாய் இராமலும் நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மையையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமுள்ளவர்களாய் இருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1 தீமோ 6:17–19).


இந்தப் பகுதியிலே வருங்காலத்திற்கான நல்ல ஆதாரம் என்ன என்பதைப் பவுல் குறிப்பிடும்போது, அங்கே அவர் கொடுப்பதையும் பகிர்வதையுமே கூறுகிறார் என்பதை அவதானிக்கலாம். இதிலிருந்து எமது எதிர்காலத்தையிட்ட பாதுகாப்பு உறுதியைப் பெற்றுக்கொள்ளும் அதிசிறந்த வழிமுறை எமது ஆஸ்தியைப் பகிர்வதுதான் என்பது தெளிவாகிறது. பகிர்வதற்கு நான் விருப்பமற்றவனாக இருப்பேனேயானால், அது தேவன்மீதான எனது நம்பபிக்கைக் குறைவின் வெளிப்பாடே என்பதை இந்த வசனம் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது. தேவன்மீதான நம்பிக்கை, பகிர்வதற்கு இட்டுச்செல்லும்.

மற்றது நாம் கொணடிருப்பது, எமது ஆஸ்தி, வெறுமனே பணம் மாத்திரமல்ல. எமக்குப் பல்வேறு மட்டங்களிலே தொடர்புகள், உறவுகள், அறிவு, திறமை போன்றனவும் 'ஆஸ்திகளாக' உண்டு. அவைகளையும் நாம் பகிரலாம், அவைகளாலும் நாம் பிறரைச் சேவிக்காலாம். இந்தக் காரியத்தைக் குறித்து நாம் அநேகமாகச் சிந்திப்பது குறைவு. தேவையுடன் வரும் ஒருவருக்கு எமது அன்பின் நிமித்தமாக (பெருமையினால் அல்ல) எமது தொர்புகள் அல்லது செல்வாக்கைப் பகிர்ந்து அவரை உரிய நபரிடம் வழிநடாத்துவதும் எமக்குரிய கொண்டிருத்தலின் ஒரு அம்சமேதான். அவ்வகையிலே நாம் அனைவருமே 'கொண்டிருக்கிறோம்'. நாம் விசுவாசிகளாய் இருந்தால், தேவனிலே நம்பிக்கை கொண்டவர்களேயானால், எம்மிடம் இல்லை என்று சொல்வதற்கு எவ்வித சாட்டுப்போக்கும் இல்லை.

**காணுதல்**

நாம் அநேகமானவைகளைப் பார்க்கிறோம். ஆனால் எவற்றைக் காண்கிறோம்? சிலவேளை, நாம் நன்கு பார்த்துப் பழகிய ஒருவரிடம், அவரது இக்கட்டு நிலைமையைப் பற்றிப் பின்பு அறியவரும்போது, 'எனக்கு நீ சொல்லியிருந்தால் நான் செய்திருப்பேனே' என்று கூறுவதுண்டல்லவா? ஏன் அதனை நாம் காணவில்லை? ஒருவேளே நாம் பிஸியானவர்களாக எம்மை எண்ணிக்கொள்ளலாம், அல்லது எமது பிரச்சினைகள் பிறரது தேவைகளைக் காணவிடாது எமது 'காணும்' கட்புலத்தைக் குறுக்கியிருக்கலாம். ஆனால் என்றுமில்லாதவாறு இந்த நாட்களிலேதான் காண்பதற்கான வழிமுறைகள் பெருகிப்போயுள்ளன. பிந்திய நிகழ்வுகள்கூட அவ்வப்போது செய்திகளிலே காணொளிகளாக வருவதுண்டு. அண்மையிலே நேபாளின் இடம்பெற்ற நிலநடுக்கப்பற்றிய காணொளிகள் எத்தனையெத்தனை வலம்வருகின்றன? அவற்றிலே நாம் 'காண்பது' என்ன? பார்ப்பது என்ன?

கிறிஸ்தவர்களாக நாம் சுயத்திலே மையமிட்ட வாழ்க்கையையோ அல்லது சுயத்திலே ஊறிப்போன



வாழ்க்கையையோ வாழும்படி அழைக்கப்பட்டவர்கள் அல்ல. "அவனவன் தனக்கானவைகளை (மட்டும்) அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப். 2:4–5) என்று வேதம் கூறுகிறது. தொடரும் அந்தப்பகுதியிலே கிறிஸ்து மனித சாயலாகி, தன்னைத் தாழ்த்திய பணியைப்பற்றிய சுருக்கக் கூற்று அங்கே கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பணியைப்பற்றிய வேதாகமக் குறிப்புக்களைப் பார்த்தால் அதையிட்ட விபரங்களை நாம் அறிந்துகொள்ளலாம்.

கிறிஸ்து மிகவும் பிஸியாக இருந்த ஒருவர். அவர் ஒரு முக்கிய புள்ளி. அவருக்கு முக்கிய பணி இருந்தது. அநேகர் அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் பிரபல்யமடைந்து வந்த ஒரு பிரசங்கி, குணமாக்கும் அற்புதர், வாதிப்பதிலே வல்லவர், போதிப்பதிலே சிறந்தவர். இத்தனையாக அவர் இருந்துங்கூட, அவர் தன்னைச் சூழ இருந்தவர்களின் தனித்த தேவைகளை, குறிப்பாக சமூகத்திலே அந்தஸ்திலே குறைந்தவர்களின் தேவைகளைக் கண்டுகொள்ளத் தவறவில்லை. குருட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரன், தொழுநோயாளி, பலவருட காலமாக குளத்தருகே இருந்த பாரிச நோயாளி, பலவருட உதிரப்பெருக்கால் அவஸ்தையுற்ற பெண், ஊர்வாய்க்கு உலை வைப்பதைத் தவிர்க்கும்படி உச்சிவெயிலிலே கிணற்றடிக்கு வந்து சென்ற சமாரியப் பெண், சமூகத்தால் ஒதுக்கப்பட்ட சகேயு... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்களது தேவைகளை எல்லாம் அவர் கண்டுகொண்டது அவர் தேவனாக இருந்ததால் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனாலும் ஆளமாக அவை ஒவ்வொன்றிலும் அவரது இடைப்படுதல்களை வாசித்தால், அவர் அவர்களையிட்டுக் கொண்டிருந்த உண்மையான கரிசினைகளைக் கண்டுகொள்ளலாம். அவர்களை அவர் வெளிப்போக்கிலோ அல்லது அந்தஸ்து மட்டத்திலோ அல்ல, உள்ளபடி அறிந்தார் அல்லது கரிசினை கொண்டார் என்று நாம் கூறலாம். கிறிஸ்தவர்கள் என்ற ரீதியிலே நாமும் கிறிஸ்துவைப்போலவே நடந்துகொள்ள எத்தனிக்கவேண்டும் அல்லவா?

எமது சகோதர சகோதரிகளை இயேசுவைப்போல நாம் அறிந்திருக்கிறோமா? அடிப்படையிலே, அவர்களது பெயர் சொல்லி அழைக்க எத்தனிப்பதிலேயே அது ஆரம்பிக்கிறது. பிறரை நாம் பிறதர், சிஸ்டர் என்று அழைப்பது உண்டு. ஆனாலும் உண்மையிலே, பல தடவைகளிலே அவர்களது பெயரோ அல்லது அவர் யார் என்பதோ எமக்குக் கொஞ்சமும் தெரியாத நிலையிலே, அப்படி அழைப்பதுண்டு. இதனால் பிறதர், சிஸ்டர் எல்லாமே இன்று அறியாத உறவின் பிரதியீடுகளாக ஆகிவிடுவதுண்டு! எமக்கு ஒருவேளை சமூகத்திலே அந்தஸ்திலே உள்ளவர்களின் பெயர்கள், அவர்களைப் பற்றிய ஒரு சில காரியங்கள் தெரிந்திருக்கலாம். ஆனால் எத்தனை பேருக்கு மீன்விற்பவனின் பெயர் தெரியும்? குப்பை அள்ள வருபவனின் பெயர் தெரியும்? காவலாளியின் பெயர் தெரியும்? அவர்களின் பின்புலம் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? அவர்களுடன் எத்தனை பேர் கதைத்திருக்கிறோம்? வைத்தியர்கள் தன்னிடம் வருபவர்களை நோயாளி என்று கருதுவது உலகப் பார்வை. அவர்களை எம்மைப்போன்ற மனிதர்களாக அறிவதுதான் அவர்களை நாம் கண்டுகொள்ள உதவும். சபைப் போதகருக்கு அங்கே வருவர்களை ஆராதிக்க வருபவர்களாகப் பார்ப்பது உலகப் பார்வை. அவர்கள் மெய்யான தேவைகளுடன் வரும் மனிதர்களாக அவர்களை அறிவது அவர்களைக் கண்டுகொள்ள உதவும் பார்வை. அப்போதுதான் அவர்களிலே உள்ள மெய்யான தேவைகளை நாம் அறிந்துகொள்வோம். இதேபோலவே எல்லாப் பணிகளிலும், எமது பார்வை உலகம் பார்ப்பதைப்போல அல்லாமல் மெய்யாகக் கண்டுகொள்வது அவசியம். எனவே நாம் பிறரைப் பார்ப்பது வேறு, காண்பது வேறு. நாம் பிறரின் தேவைகளைக் காண்பதற்கு, அவர்களிலே அப்படியாகப் பார்க்கவேண்டியவைகளைப் பார்க்கவேண்டும். உலகப் போக்கிலே பார்க்க நாம் பழக்கப்பட்டால் நாம் பார்க்கவேண்டியவற்றைப் பார்க்கத் தவறி, அவர்களது தேவைகளைக் காணவும் தவறிவிடுவோம்.



## கொடுத்தல்
## (கொடுக்ககாது அடைத்துக்கொள்ளல்)

இயேசுவின் பணியைப் பார்த்தால் அவர் அந்தந்தச் சூழ்நிலைகளிலே மக்களைப் பார்த்துப் பரிவிரக்கப்படுவதைக் காணலாம். அவர் பரிவிரக்கப்பட்டே போதித்தார், உணவு கொடுத்தார், சுகப்படுத்தினார், கதைத்தார். எனவே, கொடுக்காது அடைத்துக் கொள்வது என்றால், கொடுப்பதற்கேற்ற குணாம்சமான, அந்தப் பரிவிரக்கம் என்னிலே இல்லாது போய்விட்டது என்பதே கருத்து.

ஒருவேளை நாம் 'நானுண்டு என் வேலையுண்டு' என்ற மனப்பான்மைக்கு எம்மைப் பழக்கிக் கொள்ளக்கூடும். எனவே, தேவையற்ற பிரச்சினைகளிலே சிக்கிக்கொள்ளாமல் எம்மைத் தற்காத்துக் கொள்ளவே நாம் நாடுவதுண்டு. இன்னும் சில வேளைகளிலே நாம் காணும் தேவையுள்ள மக்கள் எம்மை ஏமாற்றியவர்கள் அல்லது எம்மால் விரோதிக்கப்படும் குழுவையோ அல்லது இனத்தையோ சேர்ந்த மக்களாக இருப்பதுண்டு. அப்படியான சந்தர்ப்பங்களிலே அவர்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படும்போது 'அது அவர்களுக்கு வேண்டியதுதான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்கிற ஒருவித பராமுக விரோத மனப்பான்மை எம்மிலே எழுவதுமுண்டு.

எம்மைத் தேவன் சந்திக்கும்போது நாம் யார்? அவருக்கு நாம் விரும்பிவர்களோ அல்லது ஏதோ பொருட்டானவர்களோ அல்ல. நாம் அவருக்கு விரோதிகளாயும் பொருட்டற்றவர்களாயும் இருந்தவர்கள். தேவன் அவரது கிருபையினாலே எம்மைச் சந்தித்தார். இப்படியாக தகுதியற்ற நிலையில் இருந்து தேவனுடைய கிருபையைப் பெற்ற நாம் பிறருக்கு உதவும் விடயத்திலே நாம் தகுதியைப் பார்க்க நாடுவது நியாயமா? இதுவே நாம் எம்மை நோக்கிக் கேட்கவேண்டிய கேள்வி. இந்தக் கேள்வி பிறருக்கு எமது இருதயத்தை அடைக்காத வகையிலே எம்மைப் பரிவிரக்கத்துக்கு எம்மை உந்தித் தள்ளும். மறுபுறத்திலே தவறு செய்யும் ஒருவரை நாம் அவரது தவறைப் பார்க்காமல் அல்லது சுட்டிக்காட்டாமல் அவருக்கு உணர்வற்ற விதத்திலே உதவுவதும் அல்ல.



மெய்யான பரிவிரக்கம் நாம் பரிவிரக்கப்படுவரின் முழுமையான விருத்தியையே நாடும். அது எம்மைத் திருப்திப்படுத்தும் ஒரு ஈகை அல்ல.

இப்படியாக நாம் சகோதர சகோதரிகளை அன்புசெய்யும்படியாகக் காண்பது, கொண்டிருப்பது, கொடுப்பது என்பது எல்லாமே மனுஷ ரீதியிலே எம்மால் செய்யமுடியாது. இதற்குத் தேவனின் வல்லமை தேவை, தேவனுடைய கிருபை தேவை, தேவனுடைய வழிநடாத்தல் தேவை. அதேவேளை எம்மிலே மாற்றம் ஏற்படும்படியாக நாம் எம்மை அர்ப்பணித்து அந்த மாற்றத்தை எம்மிலே அனுமதிக்கும் மனப்பான்மையும் எமக்குத் தேவை. நாம் தியாக அன்புள்ள கிறிஸ்தவர்களாக வளர்வதற்கான எமது அழைப்பை மீள்சீர்தூக்கிப்பார்த்து அவ்வப்போது அவற்றைச் சரியாகத் தடம்பதித்து நடாத்தும்படி எத்தனிப்போமாக.


## NCEASL இன் விசுவாச அறிக்கை

1. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கலான அறுபத்தாறு நூல்களும் மூலத்திலே அசலானதாகத் தரப்பட்டதெனவும், அவை தெய்வீக ஆசிரியத்துவம் உள்ளவையெனவும், பிழையற்றவையெனவும், அவை போதுமானவையெனவும் விசுவாசிப்பதுடன், சத்தியக் கோட்பாடுகள், விசுவாசம், செயன்முறை ஆகியவற்றையிட்ட சகல அம்சங்களிலும் அவற்றின் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்கின்றோம் (2 தீமோ. 3: 16 – 17, 2 பேதுரு 1: 19 – 21)

2. எல்லையற்ற, ராஜரீக, பரிசுத்த, சர்வ வல்ல, சர்வ ஞான, நீதியும் கிருபையும் நிறைந்த ஒரே கடவுள் உண்டென்றும் அவர் பிதா, குமாரன், தூய ஆவியானவர் ஆகிய மூன்று ஆட்களாக நித்தியமாய் உய்திருப்பதையும் விசுவாசிக்கின்றோம் (உபா. 6: 4, சங். 139, தானியேல் 4: 35, மத். 3: 16 – 17, மத். 28: 19, 2 கொரி. 13: 13)

3. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், கடவுள் மாம்சத்தில் அவதரித்ததையும், அவரது கன்னிப் பிறப்பையும், பாவமற்ற அவரது மானிட வாழ்வையும், அவரது தெய்வீக அற்புதங்களையும், அவரது ஒரே பூரணமும் போந்ததுமான பரிகார மரணத்தையும், அவரது சரீர உயிர்த்தெழுதலையும், அவரது பரமேறுதலையும், அவரது பரிந்துபேசும் பணியையும், வல்லமையுடனும் மகிமையுடனும் அவர் சொந்தமாக மீள வருதலையும் விசுவாசிக்கின்றோம். ( யோவா. 1: 1, 8: 58, பிலிப். 2: 6, ஏசா 7: 14, ஏசா. 53, மத். 1: 20 – 23, எபி. 4: 15, 7: 25, ரோமர் 3: 25 – 26, அப். நட. 2: 31 – 34, 1 தெச. 4: 16 – 17, 1 தீமோ. 3: 17, கொலோசே 2: 19, மாற்கு 4: 41)

4. மனிதன் கடவுளின் சாயலில் மூல்மமாகப் படைக்கப்பட்டதை விசுவாசிக்கின்றோம். கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்ததன்மூலம் அவன் தனது சிருஷ்டிகரைவிட்டு தூரப்பட்டுப்போனான் எனவும், அவனது சகல துறைகளும் பாவத்தினால் கறைப்பட்டுப்போயினதெனவும் சரித்திரரீதியான அவ் வீழ்ச்சி முழு மானிடத்தையும் பாவத்துள்ளும் தெய்வீக சாபத்திற்குள்ளும் மூழ்கடித்துவிட்டதெனவும் விசுவாசிக்கின்றோம். (ஆ 1: 26, 3: 1 – 15, ஏசாயா 64: 6, எரே. 17: 9, மாற்கு 7: 21 – 23, ரோமர் 3: 10 – 18, 5: 12, எபே 2: 1)




5. தொலைந்துபட்ட பாவியான மனிதனின் மீட்பானது ஒருவனது கிரியைகளினாலேயல்ல, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து சிந்திய இரத்தத்தினூடாக எமது விசுவாசத்தினால் மாத்திரமே, பரிசுத்த ஆவியானவரின் புத்துயிரூட்டலினூடாக இடம்பெறுகின்றது என நாம் விசுவாசிக்கின்றோம் (எபே. 1: 13, 2: 8 – 9, ரோமர் 3: 24, கொலோசே 2: 10 – 15)

6. பாவத்தினின்று மனந்திரும்பி இயேசுக் கிறிஸ்துவைத் தமது ஆண்டவராகவும் மீட்பராகவும் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபருள்ளும் பரிசுத்த ஆவியானவர் உறைகின்றார் எனவும், அவ் ஆவியானவரின் ஆளுகையின்கீழ் அவ் விசுவாசியானவர் இறைவாழ்வு வாழ பெலமூட்டம்பெறுகின்றார் எனவும் விசுவாசிக்கின்றோம். (ரோமர் 8: 26, 1 கொரி 6: 19, 12: 13, 1 தெச 4: 7 – 8)

7. சகல பாகங்களிலுமுள்ள மக்களைக் கொண்டதாயும், சகல காலங்களுக்கூடும் வாழ்ந்தவர்களைக் கொண்டதாயும், மொழிவாரியாகவோ, கலாச்சார ரீதியாகவோ, சமூக அந்தஸ்திலோ, கல்வியிலோ, நிறத்திலோ வேறுபட்டதான எத்தகைய வேறுபாடுகளிலும் சாராததாயும், பரிசுத்த ஆவியானவரால் உயிரூட்டப்பட்டு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற உதிரத்தினூடாக மீட்கப்பெற்ற அனைவரையும் உள்ளடக்கிய இயேசுக்கிறிஸ்துவினது சபையின் ஐக்கிய ஒருமைப்பாட்டினை நாம் விசுவாசிக்கின்றோம். (அப். நட. 20: 28, ரோமர் 2: 11; 8: 15 – 16; கலாத். 3: 28; எபே. 2: 13 – 22; 1 பேதுரு 1: 18 – 19)

8. சரீரத்தின் உயிர்த்தெழுதலையும், நியாயத்தீர்ப்பு நாளையும், கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டவர்கள் சுகிக்கும் நித்திய ஆசீர்வாதத்தையும், அவரை உதாசீனம்பண்ணியோர் சம்பாதிக்கும் நித்திய தண்டனையையும் நாம் விசுவாசிக்கின்றோம். (தானி. 12: 2 – 3; மல்கியா 3: 5; மத். 25: 46; யோவான் 3: 18; 2 தெச. 1: 9; 2 பேதுரு 2: 9 – 10; வெளி. 20: 11 – 15)

9. சபையினின்று தனது இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்கென கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து சரீரத்தில் மீள வரவிருக்கும் அண்மித்துவரும் அவரது வருகையை நாம் விசுவாசிக்கின்றோம். (யோவான் 14: 1–3; 1 தெச 4: 16–17; எபே. 5: 27; வெளி. 20: 1–5)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைக்கட்டு

# கிறிஸ்துவின் தூதுவர்களாக அழைப்பு

றூபி ஹமில்ரன்


காலத்துக்கு காலம் ஆண்டவர் அவருடைய பணிக்காக ஒவ்வொருவரை அழைக்கிறவராக இருக்கிறார். பழைய ஏற்பாடு தொடங்கி, புதிய ஏற்பாடு வரை நாம் இதை காணலாம். அவர் அழைப்பதற்கு காரணம், அவருக்கு சக ஊழியர்களாகவும், உதவி புரியும் நபர்களாகவும் இருப்பதற்கே..

தூதுவர்கள் என்பதன் கருத்து என்ன? “அனுப்பப்பட்டவர்கள்” என்று அர்த்தம். எதற்காக அனுப்பப்பட்டவர்கள்? இறைவனின் பணிக்காக இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டவர்கள்.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினால் அனுப்பப்பட்டவர்கள். கிறிஸ்துவின் தூதுவர்களாக வாழ அழைக்கப்ப்ட்டவர்கள். நாம் அனைவருமே ஒரே மாதிரியான அழைப்பை பெற்றவர்கள். ஆனால் எங்களுடைய பணிகள் வேறுபட்டதாக இருக்கலாம். பிரதானமாக

1. குடும்பம் சார்ந்த பணியாக இருக்கலாம்
2. சமூகம் சார்ந்த பணியாக இருக்கலாம்
3. உலகம் சார்ந்த பணியாக இருக்கலாம்

இதில் ஏதோ ஒரு பணிக்காக நாம் அழைக்கப்பட்டுள்ளோம். திருமறையில் எஸ்தர் என்ற ஒரு பெண் சமூகம் சார்ந்த ஒரு பணிக்காக அழைக்கப்படுகிறார் என்பதை நாம் திருமறையில் காணலாம். எஸ்தரை பற்றி நாங்கள் பார்க்கின்றபொழுது, யூத பெண்ணான எஸ்தர் பாபிலோன் நாட்டின் சூசான் அரண்மணையில் அரசியாகிறாள். ஆரம்பத்தில் எஸ்தர் ஆண்டவரின் அழைப்பை உணர்ந்து கொள்ளவில்லை. தனது சிறிய தந்தையான மொர்தெகாய் மூலம் தன் இனத்து மக்களுக்கு ஏற்பட இருக்கும் அழிவைக்குறித்து அறிந்து கொள்கிறாள். துன் மக்களுக்கு வரவிருக்கும் அழிவை அறிந்த எஸ்தர் மிகவும் மனம் வருந்துகிறாள். எஸ்தர் 8:6 வசனம் இவ்வாறு கூறுகின்றது “என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்” (8:6) என்று எஸ்தர் மனம் வருந்துவதாக கூறப்படுகிறது. எஸ்தர் தனது மக்களுக்காக மனம் வருந்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் தன் மக்களை வரவிருக்கும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய தனது பொறுப்பையும் உணர்ந்து, மக்களை காப்பாற்ற வேண்டிய பணிகளில் ஈடுபடுகிறாள். கடவுளின் அழைப்பை அந்த வேளையில் தான் உணர்ந்து கொள்கிறாள். தன்னுடைய அழைப்பை உணர்ந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட எஸ்தர் அந்த உன்னத அழைப்புக்கு தன்னை அர்ப்பணிக்கிறாள். முன்னோக்கி செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாள்.


இன்று நாம் வாழுகின்ற நமது நாட்டில் நாம் பல சவால்களுக்கு முகம் கொடுக்கிறோம்.

1. பொருளாதார பிரச்சனை
2. வேலையில்லாப்பிரச்சனை
3. சமுதாய பிரச்சனை
4. மதப்பிரச்சனை
5. குடும்பத்தில் பிளவுகள் (கணவன், மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள்)
6. திருச்சபை மக்களிடையே கருத்து வேறுபாடுகள்,
7. எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியோடு வாழ்கின்றவர்கள்.

இதுபோன்று பல்வேறுபட்ட குழப்பங்களோடு, பிரச்சனைகளோடு பிளவுபட்ட நிலையில் வாழும் சமுதாயத்தில் நாம் வாழுகிறோம். இப்படியான இந்த சூழ்நிலையில் கிறிஸ்துவின் தூதுவர்களாக அழைப்பை பெற்ற எங்களுடைய பணி என்ன?

அவர்களுடைய பிரச்சனைகளிலிருந்து, குழப்பங்களிலிருந்து விடுதலையாக்குவது நமது பொறுப்பு, நானும் எனது குடும்பமும் என்ற சுயநலத்திற்கு அப்பாற் சென்று, சமூகம் என்ற கொள்கையோடு எமது சமுதாயத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் அழைத்திருக்கிறார். இதில் ஏற்றத்தாழ்வோ, வேறுபாடோ இல்லை. இந்த அழைப்பு அவருடைய பணியை செய்வதற்காக, நாங்கள் சில வேளைகளில் நினைக்கலாம். இப்படியான பெரிய காரியங்களை செய்ய என்னால் எப்படி முடியும்? என்னால் செய்ய முடியாது என்ற எண்ணம் நமக்குள் ஏற்படலாம்.



பெண்கள் ஒதுக்கப்பட்டு, முக்காடிட்டு வீட்டிலே அடிமைப்படுத்தப்பட்டு இருந்த அந்த காலத்தில் ஒரு பெண் தைரியத்தோடு அரசசபையில் பலரின் முன்னிலையில் தன் மக்களுக்கு வரவிருக்கும் அழிவிலிருந்து மீட்கப் போராடுகிறாள். அடிமைப்பெண்ணான எஸ்தருக்கு இந்த தைரியம் எப்படி வந்தது?

நியாயதிபதிகள் 4, 5 ம் அதிகாரங்களை நாம் வாசித்துப் பார்ப்போமாக இருந்தால், லபிதோத்தின் மனைவியாகிய தெபோராள் பற்றி நாம் பார்க்கலாம். ஆன்றைய காலத்தில் ஒரு பெண் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறாள். இஸ்ரவேலை நியாயம் விசாரிப்பது என்பது எளிய காரியமல்ல. ஒரு பெண்ணிற்கு அது பெரியதொரு பணி. இஸ்ரவேலை நியாயம் விசாரித்து கொண்டிருந்த தெபோராளுக்கு தேவ அழைப்பு தேடிவந்தது. அந்த அழைப்போ அவளால் இயலாததை செய்ய அறை கூவியது. ஆனாலும் தெபோராள் தேவ அழைப்புக்கு கீழ்ப்படிந்து செல்கிறாள். அன்றைய காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறினால் அது ஆலயத்திற்கோ அல்லது பெண்கள் கூட்டத்திற்கோ செல்லும் அந்த காலத்தில் இங்கு தெபோராள் போர்க்களத்திற்கு சென்று சிறையானவர்களை மீட்க போராடுகின்றாள்.

திருமறையிலே ஆண்டவரின் பணிக்காக தூதுவர்களாக அழைக்கப்பட்ட மேலும் பலரை நாம் காணலாம். இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படியாக ஆண்டவர் மோசேயை அழைத்த போது, மோசே “நான் திக்குவாயன்” என்று கூறி அழைப்பை ஏற்றுக் கொள்ள தயங்குகிறார். அதேபோல் எரேமியாவை ஆண்டவர் அழைத்தபோது, எரேமியா தன்னை தகுதியற்ற ஒருவராக நினைக்கிறார். ஆனால் தகுதியில்லாத அவர்களை கொண்டு ஆண்டவர் பெரிய காரியங்களை செய்து முடித்ததை நாம் திருமறைக்கூடாக காணலாம்.

அதேபோல் ஆண்டவருக்கு விரோதமாக செயல்பட்ட பரிசுத்த பவுலடிகளாரை ஆண்டவர் தெரிந்து கொள்கிறார். ஆண்டவரின் அழைப்பை பெற்ற பவுலின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுகிறது. பவுல் மனம்திரும்புவது மட்டுமல்ல அவருடைய வாழ்விலும் மாற்றம் ஏற்படுகிறது. பவுல் தான் பெற்ற மனமாற்றத்தை பிறரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என முற்படுகிறார். “கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது” என்று கூறும் பவுலடிகளார் கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றுகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்டவர் யாரைத் தனது தூதுவராக அழைக்கிறாரோ, அல்லது யாரைத் தனது பணிக்காக தெரிந்து கொள்கிறாரோ, அவர்கள் அந்த அழைப்பினை ஏற்று ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது அவர்களுக்கு வேண்டிய தைரியத்தையும், பெலத்தையும் ஆண்டவர் கொடுக்கிறார். அதற்கு நாம் ஆண்டவருடன் நெருங்கியிருக்க வேண்டும். ஆண்டவர் என்ன சொல்கிறார் என்று கேட்கவும் தக்கதாக நாம் ஆண்டவருடன் நெருங்கியிருக்க வேண்டும்.

பாவத்திற்கு மரித்து தேவனை விட்டு தூரம் போயிருந்த மக்களை தேவன் தம்மோடு ஒப்புரவாக வேண்டும் என்பதற்காக தம் ஒரே குமாரனை உலகத்திற்கு அனுப்பி ஒப்புரவாக்குதலுக்கு தடையாக இருந்த பாவங்களுக்காக அவரை சிலுவையில் ஒப்புக்கொடுத்து, நம்மை தேவனோடு ஒப்புரவாக்கினார்.

நாம் அந்த ஆண்டவரின் பணியை செய்வதற்கு ஒப்புரவின் தூதுவர்களாக அழைக்கப்பட்டுள்ளோம்.



புறக்கணிக்கப்பட்டும், தள்ளப்பட்டும் பிரிந்திருக்கும் சமூகத்தை இணைக்கும் பாலமாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இன்று, குடும்ப உறவிலிருந்து, திருச்சபை ஐக்கியத்திலிருந்து பிரிந்து வாழும் எத்தனையோ மக்களை நாம் நாளாந்தம் எமது வாழ்க்கையில் சந்திக்கின்றோம். அவர்கள் மத்தியிலே எமது பணி எவ்வாறு இருக்கிறது? அவர்களை போய் சந்தித்து மறுபடியும் அவர்களை குடும்ப ஐக்கியத்திற்குள்ளும், திருச்சபை உறவுக்குள் ஒன்றுசேர்க்க நாம் முயற்சி செய்திருக்கின்றோமா?


சாதாரணமாக, திருச்சபைகளில் இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் கருத்துவேறுபாடுகள் நாளடைவில் வளர்ந்து பெண்கள் கூட்டம், வழிகாட்டிகள் கூட்டம், இறுதியில் தலைமையகத்திற்கு சென்று பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டிய நிலை இன்று திருச்சபைகளிலே காணப்படுகிறது. ஏன் நாம் பிரச்சனைக்கான தீர்வை ஆரம்பத்திலே பெற்றுக்கொள்ள முயற்சிப்பதில்லை. பிரச்சனைகளை மேல் இடங்களுக்கு கொண்டு செல்வதினால், காலம், நேரம் இப்பிரச்சனைக்கு செலவிடுவதிலும் பார்க்க வேறு விடயங்களை பற்றி கதைக்கும் சந்தர்ப்பத்தை இழந்து விடுகிறோம்.

இப்படியான சந்தர்ப்பங்களில் ஒப்புரவின் தூதுவர்களாக நாம் என்ன செய்கிறோம்? சபைகளிலே பிரச்சனைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறோமா? அல்லது சபையின் வளர்ச்சியில் ஆர்வம் காட்கின்றோமா? இவற்றைக்குறித்து சிந்தித்து பார்க்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஒப்புரவுப் பணி மூலம் தான் திருச்சபை வளர்ச்சியடைகின்றது.

முதலாவது நம்மிலே, நம் குடும்பத்திலே நமது திருச்சபையிலே, நமது சமுதாயத்திலே நாம் ஆரம்பிக்கவேண்டும். "நான் இந்த பணியை செய்வதற்காக கடவுளால் அழைப்பை பெற்றேன்" என்று பவுலடிகளார் கூறுவதைப்போல ஆண்டவர் எங்களுக்கு தந்த அதிகாரம் மக்களை அடக்குவது அல்ல மக்களுக்கு முன் கடவுளின் தூதுவனாக சென்று செயல்படுவதற்கு. அதேவேளை ஒரு தூதுவருக்கு இருக்கவேண்டிய பண்பு எங்களிடத்தில் காணப்படவேண்டும். நாம், நம்மை வெளிப்படுத்துவதை விட்டு ஆண்டவரை வெளிப்படுத்த வேண்டும்.

"குறைமாத (அகால) பிள்ளையான எனக்கும் தரிசனம் தந்தார்" என்று பவுலடிகளார் தன்னை தாழ்த்துவது போல நாமும் எங்களை தாழ்த்துவது அவசியம்.

இந்த அழைப்புக்கு நாம் தயாரா? இந்த அழைப்பு எங்களுக்கு வந்தது என்று நாங்கள் உறுதி செய்கிறோமா? நாங்கள் என்ன காரியங்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளோம்? ஆண்டவரின் அழைப்பை ஏற்று அவரின் தூதுவராக அநீதியை எதிர்த்து போராட நாங்கள் தயாரா?



சிந்தனைக்கு: ஞானமுள்ள பதிலில் இருந்து ஒரு மூடன் அறிந்துகொள்வதைப் பார்க்கிலும், மோட்டுக்கேள்வியில் இருந்து ஒரு ஞானி அதிகம் கற்றுக்கொள்ளலாம். – புரூஸ் லீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதுப்பணித்தட்டு

தெய்வீக தூதுப்பணியிலே எமது முந்திய பரம்பரைகளைச் சேர்ந்த தாசர்களின் பணிச்சரிதைகளை சம்பவக்கதைகளை அறிவதும் அவற்றில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களை எமது தூதுப்பணி ஊழியத்திலே கைக்கொள்ள அல்லது கைக்கொள்ள எத்தனிக்க உதவுவதே இத் தட்டின் நோக்கமாகும். எமது சமகாலப் பணியிலே நாம் முகங்கொடுக்கும் சவால் சிலவற்றுக்கு இத் தாசர்களின் சரிதைகள் எமக்குச் சிந்திக்கத்தக்கதாயும் கருத்திற் கொள்ளத்தக்கதாயும் சில படிப்பினைகளையும் வழிமுறைகளையும் தருமல்லவா?

# மெடோஸ் அம்மா

## சகோதரி சாந்தி பொன்னு

"கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருக்கிறார்கள். ...கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும் விளங்கப்பண்ணும்படி அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்." சங்கீதம் 19:13-15



### எனது நினைவுகளிலே சில

அம்மாவை எப்போ எங்கே முதன்முதலாக முகமுகமாக சந்தித்தேன் என்பது நினைவில் இல்லாவிட்டாலும், தாபல் மூலம் வேதப்பாடம் செய்துமுடித்ததும் பெற்றுக்கொண்ட சான்றிதழில் கண்ட அந்தக் கையெழுத்துத்தான் முதன்முதலில் அவரில் எனக்கு ஒரு இனம்புரியாத ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. கடைசிவரைக்கும், வயது முதிர்ந்த பின்பும்கூட அந்தக் கையெழுத்து அப்படியே இருந்தது. என் மனதில் தோன்றும் அத்தனை காரியங்களையும், வாலிப வயதுப் பிரச்சனைகள் முதற்தொட்டு சகலத்தையும் கடிதமூலம் தெரிவித்தால் உடன் பதில் எழுதுவார்கள். அதிலும் அவரின் சொந்தக் கையினால் எழுதி அனுப்பிய கடிதங்கள் என் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் அதிகம்.

பம்பலப்பிட்டியில் சத்திய வசனம் காரியாலயம் இருந்த காலத்தில்தான் அவரைச் சந்தித்தபோது நான் அடைந்த சந்தோஷம் மிகப் பெரிது. கொழும்புக்கு வரும்போதெல்லாம் அடிக்கடி அவரைச் சந்திப்பதுண்டு. எவ்விதமான பிரச்சனையென்றாலும் பயமின்றி வெட்கமின்றி அவரிடம் சொல்லக்கூடிய ஒரு துணிவு அவரைச் சந்திக்கின்ற எவருக்கும் வரும். பெற்றோரிடம், நண்பரிடம், சகோதரரிடம், போதகரிடம்கூட பகிர்ந்துகொள்ளமுடியாத உள்ளக்கிடக்கைகளை அவரிடம் தாராளமாகக் கொட்டலாம். எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிநேரமாயினும் அமைதியாக இருந்து கேட்பார். சில கண்டிப்புரைகள் வெளிப்பட்டாலும், இறுதியில் இரண்டு காரியங்களைத் தவறாது உச்சரிப்பார்: 'ஜெபம்பண்ணு' 'இரட்சிக்கப்படு''. இவற்றைச் சொல்லி ஜெபித்து அனுப்புவார்கள். தன் மகனை இழந்திருந்தபோது, நான் அவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அந்தவேளையிலும் என்னைத் தனியே அழைத்துச் சென்று, காரியங்கள் எப்படியிருக்கிறது என்று விசாரித்து, இந்த இரு விடயங்களை என்னிடம் சொன்னதை மறக்கமுடியாது. அவரைச் சந்தித்துப் பழகிய நாட்கள் சொற்பமாயினும், எனக்குள் ஏற்பட்ட தாக்கங்களோ ஏராளம். கைபிடித்து நடத்தாமல், நாவினால் கற்றுத்தராமல், தன் வாழ்வினால் அம்மா சுட்டிக்காட்டிய கிறிஸ்துவுக்குள்ளான பாதை இன்றும் என் முன்பாக நீண்டுகிடக்கிறது. மாம்சத்தில் நான் அவவினால் பெற்றெடுக்கப்படாதவள்: ஆனால் ஆவிக்குரிய ரீதியில் அவரைத் தாயாகக் கொண்டவள்.

அம்மாவின் ஊழியப்பாதை

மெடோஸ் அம்மாவும், சத்தியவசனமும்:

1995ம் ஆண்டில் தனது எண்பதாவது வயதைக் கடந்த நாட்களில் 'கர்த்தருக்குக் காத்திருத்தல்' என்ற தலைப்பில், 'முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்' (சங்.71:9) என்ற வசனத்தை மையமாகக்கொண்டு சத்தியவசனம் சஞ்சிகையில் கட்டுரை ஒன்று எழுதி தன் நன்றிகளை வெளிப்படுத்திய அம்மாவின் ஊழியப்பணி மகத்தானது. 1948ம் ஆண்டு இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட அம்மா, சத்தியவசனம் வானொலி பிரசங்கியாராக பணியாற்றிய அவருடைய கணவரான திரு ஏபிரகாம் மெடோஸ் அவர்களுக்கு உதவியாக இருந்தார். 1963ல் இலவச வேதப்பாடங்களை அனுப்பும் பணிக்கு, திரு ருபெஷ் அவர்களால் சத்தியவசனம் ஊழியத்தில் இணைக்கப்பட்டார். இதுதான் அவருடைய எளிமையான ஆரம்பம்.

எதிர்பாராத விதமாக 1966ம் ஆண்டில் அம்மாவின் கணவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார். அப்போது வானொலி நிகழ்ச்சிகளை நிறுத்துவதா இல்லையா என்ற சோதனைக் காலம். அந்த வேளையில், "நான் முயற்சி செய்கிறேன்'' என்று சொன்ன அம்மா, தான் இதுவரை கால்பதிக்காத ஒரு ஊழியப்பாதையில் தேவன் தன்னை அழைப்பதை உணர்ந்து அதற்குக் கீழ்ப்படிந்தார். இதைக் குறித்து அவர்: "சாதாரணமாக நான் ஒரு அமைதியான சுபாவமுள்ளவள். அநாவசியமாக அதிகம் பேசமாட்டேன். சமையல் அறையில் குடும்பத்தின் தலைவியாக, மூன்று பெண்பிள்ளைகளுக்கும் இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் தாயாகிய என்னை ஆண்டவர் தெரிந்துகொண்டது அதிசயம்'' என்று சத்தியவசனம் 40வது ஆண்டு நிறைவையும், சஞ்சிகை தனது 25வது ஆண்டு நிறைவையும் பூர்த்திசெய்த நாளில் தனது வாழ்த்துரையை எழுதியபோது, சற்று தனது ஊழியப்பதையை நினைவுகூர்ந்து இந்த வார்த்தைகளை அம்மா எழுதினார்கள்.

"சத்தியவசனம், மெடோஸ் அம்மா'' இவை இரண்டையும் வேறுபிரித்து சிந்திக்கமுடியாத அளவுக்கு அம்மாவுடன் இணைந்ததாகவே சத்தியவசனம் ஊழியம் எல்லோர் மனதிலும் இடம்பிடித்திருந்த காலம் அது. இலவச வேதப்பாடம் அனுப்புபவராக இணைந்துகொண்ட அம்மா, 1966ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரையிலும் சத்தியவசனம் தமிழ்ப்பணியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு நடத்தினார். 82ம் ஆண்டில் சத்தியவசனம் ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றபின்னரும், தொடர்ந்து ஊழியப்பணியில் தனது பங்களிப்பைக் கொடுத்துக்கொண்டே இருந்தார். வெள்ளிதோறும் மாதர் நிகழ்ச்சியை வானொலிக்கு வழங்கிக் கொண்டேயிருந்தார்.

இவரது பணிக்காலத்தில் பணிக்கென ஊழியரைத் தெரிந்தெடுப்பதில் இவரது பாணி தனித்துவமானது. ஒரு உதாரணத்தை இங்கே குறிப்பிடலாம்: மலைநாட்டுப் பகுதிக்குச ஊழியம் செய்யச் சென்றிருந்த அம்மா, ஒரு தோட்டத்தில் தேயிலைத் தொழிற்சாலையில் ஆபீசராகப் பணியாற்றிய ஒரு கிறிஸ்தவரது வீட்டிற்குச் சென்றிருந்தார். வீட்டினுள் நுளைந்ததும், வீட்டின் சுவரிலே தொங்கவிடப்பட்ட படங்கள் இவரைக் கவர்ந்தன. அவை கையால் தீட்டப்பட்ட ஓவியங்களையும், எழுதப்பட்ட வேதவாக்கியங்களையும் கொண்டிருந்தன. இவற்றை வரைந்தது யார் என்று அம்மா கேட்க, தகப்பன் தன் மகனைச் சுட்டிக்காட்ட, தன் உள்ளுணர்வில் உணர்த்தப்பட்ட அம்மா, நிர்வாகக் குழவின் அனுமதியுடன் அந்த இளம் வாலிபனை ஊழியத்தில் இணைத்துக்கொண்டார். கடிதங்களுக்கு விலாசம் எழுதுகின்ற ஊழியத்துடன் சத்தியவசனம் ஸ்தாபனத்தில் பணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்த இந்த வாலிபன்தான் பின்னர் சத்தியவசனம் சஞ்சிகையின் ஆசிரியராக அநேக ஆண்டுகள் அரும் பணியாற்றி இன்று லண்டனிலே போதகராகப் பணியாற்றும் சாம் போல் அவர்கள்.

1983ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக அநேகர் பணியைவிட்டு விலகிச் சென்றுவிட்டனர். அப்போது அம்மா ஓய்வுபெற்றிருந்தபோதும், தாமாக முன்வந்து ஊழியப்பணி நிறுத்தப்பட்டுவிடாதபடிக்கு இடைவிடாத ஜெபத்துடனும் சிலரைச் சேர்த்துக்கொண்டு, சத்தியவசனம் காலூன்றி நிற்கக் காரணமானார். சத்தியவசனம் சஞ்சிகை தனது 20வது ஆண்டு நிறைவைப் பூர்த்திசெய்த சமயம், அம்மா தனது வாழ்த்துச் செய்தியில், "இந்த ஊழியம் கர்த்தரால் கட்டப்படாதிருந்திருக்குமேயானால், நாம் எடுத்த பிரயாசங்கள் எல்லாம் விருதாவாகியிருக்கும். எவ்வித சேதமுமின்றி வேதாகமத்துக்குத் திருப்புதல் ஊழியம் தொடர்ந்து நடைபெற்றுவருவதால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று எழுதியுள்ளார்.

அம்மா ஒரு நல்ல தலைவியாக இருக்கக் காரணம், அவர் ஒரு நல்ல ஊழியராக இருந்தது என்பதுதான். தனக்குக் கீழே பணிபுரியும் பணியாளரை அவர் நடத்திய விதமே தனி. அன்பும் கண்டிப்பும் எப்போதும் கலந்திருக்கும். எல்லாவற்றிலும் நேர்த்தியை எதிர்பார்க்கும் ஒருவர்தான் அம்மா. மிக நுணுக்கமாக காரியங்களை முன்னெடுப்பார். எத்தனை தடவைகள்னாலும், ஒரு காரியம் நேர்த்தியாக வரும்வரைக்கும் திரும்பத் திரும்ப சளைக்காமல் செய்வார். வானொலிக்காக நிகழ்ச்சிகளைக் கொடுக்கும்போது, திரும்பத்திரும்ப அழித்து அழித்து அதனைப் பதியும்போது சேர்ந்து பணிபுரிகிறவர்களுக்கும் ஒரு சோர்வு வரத்தான் செய்தது. ஊழியப்பணியாளர்களும் அவருக்குப் பயந்து அல்ல, அவரில் கொண்டிருந்த பயம் கலந்த மரியாதையையே வெளிப்படுத்தினர்.

சிறுமைப்பட்டவர்கள், தனிமைப் படுத்தப்பட்டவர்கள், வியாதிப்பட்டவர்கள் என்று அம்மா தேடித் தேடிப்போனவர்கள் அநேகர். அவரின் ஜெபமே ஒரு சுகமளிக்கும் மருந்துதான். இன்று கொழும்பில் நிற்பார்; நாளை பதுளையில் நிற்பார். ஒரு ஆத்துமாவுக்காக பல மைல்கள் பஸ்வண்டியிலோ புகையிரதத்திலோ பயணம் செய்துபோக அவர் தயங்குவதேயில்லை. மலை நாட்டுப் பகுதிகளில் அம்மா அநேகருக்கு ஆறுதலாக இருந்திருக்கிறார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அம்மாவும் ஜெபஇல்லமும்:

இந்நாட்களைப்போல அந்த நாட்களில் ஏராளமான ஊழியங்களோ, வேதப்படிப்புகளோ இருக்கவில்லை. ஏராளமானவர்கள் இரட்சிப்பு என்றால் என்ன விலை என்று கேட்குமளவுக்கு அடிப்படை அறிவுகூட இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்த காலம் அது. வேதாகமத்திற்கு திருப்புதல் ஸ்தாபனத்திலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சுமந்துகொண்டும், எந்த அறிவுமின்றி, வேத வாசிப்பு ஜெபம் எதுவும் இல்லாமல், இரட்சிப்பின் உன்னத அனுபவமும் இன்றி, வீண் அலுவல்களிலும் அரட்டைகளிலும் பொழுதுபோக்கும் பெண்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்து, சத்தியத்தில் வழிநடத்தி, இரட்சிப்புக்கு நேராக இட்டுச் செல்லவேண்டும் என்ற ஒரு வாஞ்சை அம்மாவின் உள்ளத்தில் துளிர்விடடெழுந்தது. அதற்கிணங்க திருமதி சாமுவேல் அம்மா (கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்)அவர்களுடன் இணைந்து 1990-1991 ஆண்டுக் காலப்பகுதியில் ஜெபிக்க ஆரம்பித்தார். 1991ம் ஆண்டு செப்டம்பர் அளவில் மூன்றுபேர் இணைந்துகொண்டனர். இருவராய் ஆரம்பித்து, ஐவராய் எழுந்து, 17, 35, 75 என்று தேவகிருபையால் பெண்கள் இந்த ஜெபவேளைக்கு வரத்தொடங்கினர். வீடுகளில் கூடி ஜெபித்த இவர்கள், மறைந்த வண.பிதா டைட்டஸ் அவர்களின் அனுசரணையினால் தெகிவளை கிறிஸ்து ஆலய மண்டபத்தில் கூடி ஜெபிக்க ஆரம்பித்தனர். ஜெபம் வேதவாசிப்பு என்று ஆரம்பித்த இந்தக் கூடுகை, காலப்போக்கில் ஆராதனை, பாடல், ஜெபம், தொடர்வேதப்படிப்பு, கூட்டு ஜெபம் என்று வளந்தது மாத்திரமல்ல, பெண்கள் தங்கள் உள்ளக் கிடைக்கைகளைக் கொட்டி ஆறுதல் பெற்று, பெலம்பெற்று, தங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்குள் கட்டியெழுப்பி உறுதிப்படுத்தக்கூடிய இடமாக, ஒரு ஜெபஇல்லமாக இது மாறியது. அங்கே சபைப் பாகுபாடு கிடையாது. ஏற்றத் தாழ்வு கிடையாது. விளம்பரம் கிடையாது. வற்புறுத்தல் கிடையாது. எல்லாப் பெண்களும் ஒரே மனமும், ஒருமைப்பாடும், ஒரே ஆவியும் உடையவர்களாய் கூடி ஜெபித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேதத்தை ஆராய்ந்து படித்து, தம்மைக் கிறிஸ்துவுக்குள் திடப்படுத்திக்கொள்ளும் ஒரு இடம்தான் இது. இந்தக் கூடுகை அங்கே வருகின்ற பெண்களுக்கு ஒரு இல்லம் போன்றது; ஒரு கல்லூரி போன்றது; அன்பின் பிணைப்பில் கட்டப்படுகின்ற ஒரு குடும்பம் போன்றது. இப் பெணகளுக்கு ஒரு ஆறுதலின் இல்லமாக இதனை அமைக்க தேவன் வித்திட்டது மெடோஸ் அம்மாவின் இதயத்தில்தான்.

## ஜெபஇல்லத்தில் பங்களிப்பு:

### 1. அன்பும் கண்டிப்பும்

தாய்மையின் அன்பு அவரிடம் பெருகியிருந்தாலும், அதனை அவர் நம்மிடம் வெளிக்கட்டிய விதம் நமக்கு சற்றுக் கடினமாகவே இருந்தது. அன்பான வரவேற்பும், உபசரிப்பும் பிரமாதம். ஆனால், அன்புடன் கண்டிப்பும் கலந்துதான் இருக்கும். நாம் சரளமாகப் பழகினாலும் ஒரு மரியாதையும் பயமும் நமக்குள் எப்போதும் குடிகொண்டிருக்கும். அதற்கேற்றாற்போலவே அவருடைய காரியங்கள் இருக்கும். ஆசை வார்த்தைகள் பேசி, போலியாக ஆறுதல்படுத்துகின்ற குணமே அவரிடம் இல்லை. எதையும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறிவிடுவார்கள்.


### 2. நேர்த்தி

ஒழுங்காயும் நேர்த்தியாகவும் இருக்கவேண்டும் என்பதில் அம்மா மிகவும் கண்டிப்பானவர். ஒரு வானொலி நிகழ்ச்சிக்காக ஒரு கைப்பிரதியைத் தயாரிக்கும்போது, எத்தனை தடவைகள் கிழித்து எறிவார்கள் என்பதற்கு நானே சாட்சி. அந்நாட்களில் கையினால்தான் எழுதவேண்டும். ஆனால் நிகழ்ச்சி நேர்த்தியாக அமையவேண்டும் என்பதற்காக எத்தனைதடவைகள் திரும்பத் திரும்ப எழுதவும் அம்மா தயாராகவே இருந்தார்கள். எதுவும் நேர்த்தியாக அமையும்வரைக்கும் சளைக்கமாட்டார். 'சமாளித்தல்' என்பது அவரது அகராதியிலே இல்லை.

### 3. தோற்ற அழகு

அம்மாவின் தோற்றமே ஒரு தனி அழகுதான். எளிமையும், பணிவும் அவரின் தோற்றத்தில் உறைந்திருந்தது. உடுத்தும் உடையும் ஒரு தனித்துவம்தான். மெல்லிய நிறங்களில் அவர் அணியும் ஆடையிலும் அழகுடன் நேர்த்தியும் கலந்திருக்கும். கையில் ஒரு பெரிய கைப்பை தொங்கும். அதனுள் குடையும் வேதப்புத்தகமும் இருக்கும். வயது முதிர்ந்து வந்த நிலையிலும் தளராத நடையும், கெம்பீரமான தோற்றமுமாக ஆத்துமாக்களைத் தேடித் தேடி அவர் நடந்து திரிந்தார்.






### 4. குரலும், பேச்சும்

அம்மாவின் தோற்றத்திற்கும் அவரின் குரலுக்கும் தொடர்பு இராது! வயது முதிர்ந்த காலத்திலும் வானொலியில் ஒலிக்கும் அவருடைய குரலைக் கேட்ட அநேகர் அவரை ஒரு இளவயதினராகவே மதிப்பிட்டனர். கணீரென்று ஒலிக்கும் அவரது குரலைக் குறித்து, இன்றும் ஜீவித்திருக்கின்ற வயது முதிர்ந்தவர்கள் ரசனையாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் வானொலியில் கொடுக்கும் செய்திகள் மிக எளிமையானவையாகவே இருக்கும். ஆனால், அந்த எளிமையே அநேகருடைய இருதயம் இயேசுவின்பால் ஈர்க்கப்படக் காரணமாயிற்று. அம்மா ஒரு பிரசங்கி அல்ல. அதிகம் பேசமாட்டார். ஆனால் பெண்கள் மத்தியில் அவர் எழுந்து நின்று இரண்டு வார்த்தைகள் பேசினாலும், அவை பொன்னாகவே இருக்கும். காலையில் நேரத்தோடு வந்து, ஜெப இல்ல ஒன்றுகூடுகையில் வந்து அமரும்போது, நமக்கெல்லாம் எலியாவின் பெலம் வந்ததுபோல இருக்கும்.

### 5. ஒரே நோக்கம்

அம்மாவின் இருதயம் முழுவதும் நிறைந்திருந்த ஒரே விடயம், 'இரட்சிப்பு இரட்சிப்பு'. மக்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிப்பைப் பெறாவிட்டால் நரகத்துக்குப் போய்விடுவார்களே, ஒரு தரமாவது அவர்கள் இயேசு என்ற நாமத்தைக் கேட்கவேண்டுமே என்று அவர் கலங்குவார். ஆத்தும பாரம் மிக்க ஒரு தாய் அவர். காலி வீதியோரத்தில், வீட்டின் வாசலண்டையில் சாயங்கால வேளையில் உட்கார்ந்து "இந்த வீதியால் போகிறவர்களைப் பார்க்கிறேன். பெயர் அறியாத அந்த ஒவ்வொரு முகங்களுக்காகவும் ஜெபிக்கிறேன். அவர்களும் இரட்சிப்படையவேண்டுமே" என்று அம்மா சொன்னபோதுதான், பிறருக்காக ஜெபிக்கின்ற உத்தரவாதம் நமக்குண்டு என்ற உணர்வு நமக்கு வந்தது.

பின்னர் ஒருமுறை அவர் நம்மில் சிலரை அழைத்து, இரட்சிப்பின் செய்தியை ஒரு கடிதமாக எழுதி மக்களுக்கு தபாலில் அனுப்புவோமா என்று தனது மனவிருப்பதை வெளிப்படுத்தினார். அப்படியே ஒரு கடிதத்தை அம்மாவின் கைப்பட எழுதி 1000





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகள் செய்து, 1000பேரின் விலாசங்கள் சேகரித்து மேல்விலாசத்தை எழுதி தபாலில் சேர்த்தோம்.

### 6. பிரயாசமும், விடாமுயற்சியும்

சமபூமியோ, மலைத்தேசமோ பட்டணமோ சேரிப்புறமோ எதுவாயினும், ஒரு தனி நபரைச் சந்திப்பதற்காக பல மைல்கள் பிரயாணம் செய்யவும் தயங்காத சலிக்காத ஒருவர்தான் மெடோஸ் அம்மா. கூட்டம் என்றால் எத்தனைபேர் வருவார்கள் என்று எண்கணக்குப் பார்க்கின்ற இந்நாட்களில் மெடோஸ் அம்மாவைப்போல ஒருவர் இருப்பது அபூர்வம். முன் அனுமதி பெற்றாலும் காத்திருக்கவேண்டிய இக் காலத்தில், எந்நேரமும் எந்தவேளையிலும் போய் சந்திக்கக்கூடிய ஒருவராய் நம் மத்தியில் வாழ்ந்திருந்தார்.

### 7. நல் ஆலோசகர்

அம்மா, ஆலோசகர் பணிக்கென்று எவ்வித பட்டமும் பெற்றவர் அல்ல. என்ன கடினமான பிரச்சனைகளாயினும், அவரை நெருங்கும்போதே அவரின் அமைதியான பாங்கு இயல்பாகவே ஒருவித ஆறுதலைத் தந்துவிடும். நேரம் கொடுத்து தன்னிடம் வருபவர்களுக்குச் செவிகொடுப்பார்கள். அதிகம் ஆலோசனை தருவார் என்று சொல்லமுடியாது. ஆனால், ஆரவாரமற்ற, அமைதலான குரலிலே, எளிமையாக ஆனால் அழுத்தமாக வந்தவரை ஜெபத்திலே வழிநடத்துவதும் அவருக்கென்ற ஒருவித தனித்துவம்தான். ஜெபம் முடிந்ததும், "மேற்கொண்டு எதுவும் செய்யவேண்டாம். கர்த்தருக்கும் அமர்ந்திருங்கள். கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என்று சொல்லி அனுப்புவார்கள். சிலசமயம் இது நமக்கு விசனத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனாலும் காத்திருக்கும்போது, ஏற்ற வேளையில் காரியங்கள் எப்படி மாறியது என்று தெரியாமலே மாறவிட்டிருந்ததை என் அனுபவத்திலும் கண்டிருக்கிறேன். இந்த விசுவாசம் நம்மையும் நன்கு பக்குவப்படுத்தியது.

8. சிறந்த பணியாள்

வீட்டிலும், வெளியிலும், ஸ்தாபனத்தில் பணிசெய்தபொழுதும் அம்மா ஒரு முதலாளியாக அல்ல, ஒரு சிறந்த பணியாளுக்கு முன் உதாரணமாகவே இருந்தார். ஒரு நிமிடமும் அவர் வீணாக நேரத்தைச் செலவு செய்து நான் பார்த்ததில்லை. சுறுசுறுப்பும், தைரியமும், விடாமுயற்சியும் உள்ளவர்தான் மெடோஸ் அம்மா. வீட்டின் பின்புறத்தில் ஒரு வீட்டுக் காய்கறித் தோட்டம் வைத்திருந்தார். அதிலிருந்து மரக்கறியைப் பிடுங்கித் தரும்போது அவரின் முகத்தில் ஒருவித பெருமை இளையோடும். வீண் செலவு செய்யமாட்டார்; அதற்காக அவர் கஞ்சத்தனம் உள்ளவரும் அல்ல. மற்றவர்களைக்கொண்டு வேலை வாங்கிக்கொண்டு தான் ராணி மாதிரி உட்கார்ந்திருப்பவரும் அல்ல அம்மா. தாமும் சேர்ந்து பணியில் இறங்கிவிடுவார்.

### ஊழியத்திலே சந்தித்த சில முக்கிய சவால்கள்

1. அம்மாவின் வாழ்விலே அவர் சந்தித்த முதலாவது பெரிய சவால் அவரது அன்புக் கணவரின் மரணம்தான். 1966ம் ஆண்டு ஜனவரி 17ம் திகதி அன்று அந்தப் பேரிடி விழுந்தது. இதைக் குறித்து 1982ம் ஆண்டு ஜனவரி பெப்ரவரி சஞ்சிகையில் அவர் எழுதிய வரிகள் இதோ: "இந்த இழப்பை கர்த்தருக்குள் ஏற்றுக்கொண்டு, .....நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பெற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் (அப்.20:24) என்று பவுல் கூறியபடி எனது கணவர் செய்துவந்த ஊழியமானது அணைந்துபோகாதபடி அதைத் தொடர்ந்து செய்ய வாஞ்சித்தேன். அருமையான நேயர்களின் ஜெபங்களும் கடிதங்களும் எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. ஊழியத்தில் நான் வைத்திருந்த வாஞ்சையினாலும் பாரத்தினாலும் என் அன்புக் கணவரை இழந்த சில நாட்களுக்குள்ளாகவே ஊழியத்தைத் தொடர்ந்தேன். சத்தியவசனம் வானொலி நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்படாதபடி 1966ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அதைத் தொடர்ந்து செய்ய தேவன் கிருபை செய்தார்."

2. தேவகிருபையால் சத்தியவசனம் ஊழியங்கள் மிகச் சிறப்பாக விருத்தியடைந்து, நேயர்கள் வாசகர்கள் பெருகி, மிகுந்த சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் ஊழியம் நடந்து கொண்டிருந்தபோது விழுந்தது இரண்டாவது பேரிடி அவரது இரண்டாவது மகனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம். "எனதருமை மகனின் மரணம் நிகழ்ந்தபோது நான் மிகுந்த துயரத்துக்குள்ளானேன். மனம் சோர்ந்திருந்தேன்" என்று அதைக் குறித்து அம்மா எழுதியுள்ளார்கள். பலர் பலவித கேள்விகளை எழுப்பத் தவறவில்லை. பலர் அவருடைய ஊழியத்தைக்கூட சந்தேகிக்க முயன்றனர். வாழ்வில் ஆறுதல் தேடி அமைதி தேடி அம்மாவை நாம் நாடும்போது, அவருக்கு இப்படி நேரிடுவது எப்படி என்ற கேள்வி அந்நாட்களில் எனக்குள்ளும் எழுந்தது. ஆனால் பல வருடங்களின் பின்னர் இதைக் குறித்து என்னுடன் அம்மா பேசியபோது, "என் மகனுக்காக நான் செய்த ஜெபங்கள் வீண்போகவில்லை. அவனது கடைசி நாட்கள் பொன் போன்றவை. அவனது மரணம் கர்த்தருக்கு சாட்சியாகவே விளங்கியது. அவன் என் ஆண்டவருடன் இளைப்பாறிக்கொண்டிருக்கிறான்" என்றார். அதேசமயம் அந்நாட்களில் சத்தியவசனம் ஊழியத்தில் இணைந்திருந்த விசுவாசத் தோழரும் ஜெபத்தோழரும் தங்கள் ஜெபங்கள் கடிதங்கள் மூலமும், நேரில் சந்தித்தும் அம்மாவைத் திடப்படுத்தினார்கள் என்பதையும் அம்மா நன்றியோடு பகிர்ந்துகொண்டார்.

3. நாட்டில் ஏற்பட்ட கலவரத்தினால் காரியாலயத்தை மூடிவிடுவதா என்ற நிலைமை ஏற்பட்டபோது, ஓய்வுபெற்றருந்த அம்மாவுக்கு இதுவும் ஒரு சவாலாகியது. பலவித ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 1973ல் சஞ்சிகையையும் ஆரம்பித்து, தரிசனத்தோடு தியானப் புத்தகத்தையும் ஆரம்பித்து... இவ்விதமாக ஊழியம் வளர்ந்துவரும்போது அதனை மூடிவிடுவது என்பது நிச்சயம் அது அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. திகைத்து நின்ற தாயாரை தேவன் பலப்படுத்தினார். இரண்டு ஊழியரின் பக்கபலத்துடன் ஊழியத்தின் வெளிச்சம் மங்கிவிடாமல் இருகைகளாலும் அதனைப் பாதுகாத்து, பின்னால் வந்தவரிடம் அதனைக் கையளித்தார் அம்மா.

### மரணம்

இறுதி மூச்சுவரை மரணத்தைக் குறித்துக் கவலைப்படாமல், அவரது 80ம், 85ம் பிறந்த நாள் வைபவத்திலும் 'எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும்' என்பதே அவருடைய செய்தியாயிருந்தது. சத்தியவசனம் ஊழியம் அவரது பொறுப்புமிக்க பணியென்றால், ஜெபஇல்லாம் அவரது மூச்சு என்றதான் சொல்லவேண்டும். படுக்கையிலிருந்த நாட்களிலும், 'ஜெப இல்லம் நடந்து முடிந்துவிட்டதா" என்பதே அவரது கேள்வியாகும். தனக்கென்றிருந்த எல்லாவற்றையும், அவர் பாவித்த பரிசுத்த வேதாகமத்தைக்கூட தனக்குப் பின் இன்னாருக்குக் கொடுக்கவேண்டும் என்று யாவற்றையும் ஒழுங்குசெய்து மரணத்திற்கு ஆயத்தமாயிருந்தார் அவர். படுக்கையிலிருந்தாலும் வெள்ளிக் கிழமைகளிலே ஜெபஇல்லம்தான் அவரது பேச்சாக இருக்கும். தனது அன்பான பிள்ளைகளின் அரவணைப்பில் இருந்தபோதும், அரவணைப்பின்றித் தவிக்கும் ஜெபஇல்லத்தின் முதியோருக்காகக் கலங்கியது அவரது உள்ளம். அவருடைய இறுதிக் கணத்திலே நேரம் நெருங்கிவிட்டதை அறிந்து ஓடிச்சென்று அவருடைய கைகளைப் பற்றிக்கொண்டு, 'அம்மா நான் வந்துவிட்டேன்' என்று சொன்ன ஓரிரு நிமிடங்களில் அவரின் ஆவி பிரிந்ததை என்னால் உயிருள்ளவரை மறக்கமுடியாது.

### முடிவாக:


இன்று பலர் ஊழியத்தில் எழும்பியிருக்கிறார்கள். பலவித ஊழியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பல நவீனங்கள் நிறைந்து வழிகின்றன. அறிவும் பெருத்துவருகிறது. பட்டங்கள் பதவிகள், அதற்கான போட்டிகள் என்று ஏராளம். இப்படிப்பட்ட இந்த காலப்பகுதியில் அம்மாவும் அவர் நடந்துசென்ற ஊழியப் பாதையும், விசுவாசத்துடன் கூடிய ஜெபவாழ்வும், பணத்துக்கு யாரிடமும் கையேந்தாத பக்குவமும் சற்று பழமையானதாகச் சிலரால் சொல்லப்பட்டாலும், அவருடைய ஊழியப் பாதையானது, இன்றைய பிரபல்யம் வாய்ந்தவர்கள் என்றாலென்ன, சாதாரண ஊழியர் என்றாலென்ன சகலருக்கும் ஒரு சவால்.

- அவர் நடந்த ஊழியப் பாதை பலன் எதிர்பாராதது.
- முழுமையான அர்ப்பணிப்பு நிறைந்ததொரு வாழ்க்கைமுறை
  முழுமையாய் தேவனையே நம்பி அவரையே சார்ந்திருந்த ஊழியப்பாதை

தொடர்ச்சி பக்கம் 20 இல் காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திட்ட முகாமைத்துவம்

## சர்ஜீவ்ராம்

### தொடர் 2


சென்ற தொடரில் (தொடர் -1) திட்டம் எனறால் என்ன?, அதன் தன்மைகள் எவை?, திட்ட முகாமைத்துவம் என்றால் என்ன?, என பல விடயங்களைக் குறித்து கற்றுக்கொண்டோம். இத்தொடரில் திட்ட முகாமைத்துவத்தை விரிவாய்ப் பார்ப்பதுடன், திட்டத்தின் சுற்று வட்டம், படிமுறைகள் போன்றவற்றையும் ஆராய்வோம்.

**திட்டச் சுற்று வட்டம் (Project Life Cycle)**

ஒரு மனிதன் பிறந்து, வாழ்ந்து, மரிப்பது எனும் வாழ்க்கை வட்டம் போன்றுதான் ஒரு திட்டத்தின் சுற்று வட்டமும் (Project Life Cycle) அமைந்துள்ளது. இவ்வாழ்க்கை வட்டத்தின் காலப்பகுதியே ஒரு திட்டத்தின் காலப்பகுதி என்று கூறலாம். திட்டம் ஒன்றின் சுற்று வட்டம் என்பது "ஒரு திட்டத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரை இடம்பெறுபவைகளையே குறிக்கின்றது". இவ்வுலகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு திட்டங்களுக்கும் அதற்கென்று தனிப்பட்ட ஒவ்வொரு சுற்று வட்டங்கள் உண்டு. அது கட்டுமானப் பணி என்றாலும் சரி, உற்பத்தி வேலை என்றாலும் சரி, தகவல் தொழில்நுட்ப வேலை என்றாலும் சரி அல்லது மனிதநேய நோக்குடைய திட்டங்கள் என்றாலும் சரி, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை வட்டம் ஒன்று உண்டு.

திட்டமிடல், நிறைவேற்றுதல், கணகாணித்தல், கட்டுப்படுத்தல்
திட்ட சுற்று வட்டம்
ஆரம்பம்
முடிவு


கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி உருவப்படம் ஒரு திட்டத்தின் சுற்று வட்டத்தை நாங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள உதவுகின்றது




திட்டம் ஒன்றின் சுற்று வட்டம் இவ்வாறாக அமைந்தாலும், என்னதான் திட்ட முகாமையாளருக்கு அனுபவம் இருந்தாலும் திட்டம் ஒன்று நிறைவேறும் வரை நிறுவனங்களின் முகாமைத்துவம் பொறுமையாக இருப்பதில்லை மாறாக, செயல்முறைகள் இடம்பெற்றதற்கான உறுதி, எவ்வளவு நன்றாக திட்டம் இடம்பெறுகின்றது என்ற தகவல்களை ஒவ்வொரு கட்டத்திலும் அறிந்துகொள்ள சகல நிறுவனங்களும் ஆவலாய் இருப்பது வழமையான ஒரு விடயம். ஏன், எங்கள் சூழலில் ஏதாவது இடம்பெற்றால் என்ன நடக்கின்றது என்றும் என்ன நிலமையில் தற்போது உள்ளது என்று ஆராய்வதும் எங்கள் இரத்தில் ஊறிய ஒரு விடயம்தானே. எனவே, ஒரு திட்டத்தின் சுற்று வட்டம் அதன் ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் (each phase) ஏதோவொரு வெளிப்பாட்டைக் காட்டக்கூடிய விதத்தில் பின்வருமாறு வரையப்படுகின்றது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏற்கனவே மேலே குறிப்பிடப்பட்டதுபோல ஒவ்வொரு திட்டத்தின் வாழ்க்கை வட்டமும் ஒன்றோடு ஒன்று வேறுபட்டதுபோல அதனுள் இடம்பெறும் கட்டங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று வேறுபடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் அடிப்படையாக (குறைந்தது) மூன்று கட்டங்களே உள்ளன. அவை ஆரம்ப கட்டம், இடைக்கட்டம் மற்றும் இறுதிக்கட்டமாகும்.

## திட்ட வாழ்க்கை வட்டத்தின் இயல்பு (Project Live Cycle Characteristics)

- பொதுவாக ஒவ்வொரு கட்டங்களும் ஒரு முறையான ஒழுங்குவரிசையில் அமைந்திருப்பதோடு அடுத்துவரும் கட்டம் பின்தொடர இடமளிக்கின்றது.
- திட்ட விலைக்கணிப்பிடல் (Project Costing) மற்றும் பணியாளர்களை நியமித்தல் (staffing) போன்ற தேவைகள் ஆரம்பக்கட்டத்தில் குறைவாகவே இருக்கும். அதேநேரம், திட்ட செலவுகளும், வளங்களின் தேவைகளும் இடைக்கட்டப்பகுதியில் மிகவும் அதிகமாக இருக்கும். திட்டம் தொடர்ந்து இறுதிக்கட்டத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது திட்ட செலவுகளும், வளங்களின் தேவைகளும் குறைந்து கொண்டு செல்லும்.
- திட்டம் வெற்றி அடைவதற்கான சாத்தியக்கூறு திட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் எப்போதும் மிகவும் குறைவாகவே காணப்படும். திட்டம் நிறைவை நெருங்கிக்கொண்டிருக்கும்பொழுது வெற்றி அடைவதற்கான சாத்தியக்கூறு மிகவும் அதிகமாகவே காணப்படும்.
- திட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் பங்குதாரர்களின் (stakeholders) செல்வாக்கு எப்போதும் அதிகமாகவே காணப்படும். திட்டம் நிறைவை நேருங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவர்களது செல்வாக்கு குறைவாகவே காணப்படும்.
- திட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் ஏதேனும் மாற்றத்தைக் கொண்டுவர நேரிடின் அதற்கான மாற்ற செலவுகள் (cost of changes) குறைவாகவே இருக்கும் மாறாக திட்டம் நிறைவை நோக்கி பயணிக்கும்பொழுது மாற்ற செலவும் அதிகரித்துக்கொண்டே செல்லும்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேழைப்புறா
95, காலி வீதி,
தெஹிவளை 10350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org